மதிப்பிற்குரியவர்களுக்கு...
RAMRAJ
காட்டன்
வேட்டிகள் • சர்ட்டுகள் • பனியன்கள்

மலர் 8 • இதழ் 3 • செப்டம்பர் 2023 • விலை ரூ.18/-

# வெண்மை

தமிழ் மாத இதழ் VENMAI

எண்ணங்கள்

# அன்பாசிரியர்

## சிறப்பிதழ்





Float in Shades
RAMRAJ
CULTURE CLUB®
MATCHING DHOTIS & SHIRTS
www.ramrajcotton.in

மதிப்பிற்குரியவர்களுக்கு...
RAMRAJ
காட்டன்
வேட்டிகள் • சர்ட்டுகள் • பனியன்கள்

RAMRAJ
40
OF TRADITION
WOVEN BY TRUST

அன்பும் அறிவும் ஒழுக்கமும் கற்றுக் கொடுத்து
அடுத்த தலைமுறையை அற்புதமாகச் செதுக்கும்
அன்பாசிரியர்களை வாழ்த்தி வணங்குவோம்.
நமக்குக் கற்றுக்கொடுக்கும் எல்லோரையும்
ஆசிரியர்களாகக் கருதி வணங்க வழிகாட்டும்

# அன்பாசிரியர்

## சிறப்பிதழ்



என்ற இந்தப் பயனுள்ள நூலை
வழங்குவதில் பெருமிதம் கொள்கிறோம்.

# மதிப்பிற்குரியவர்களுக்கு...

**வணக்கம்.**

ஒரு நாடு வளர்ச்சிப் பாதையில் வீறுநடை போடுகிறது என்றால் மூன்று பேர் அந்தப் பெருமைக்குக் காரணமானவர்கள். தாய், தந்தை மற்றும் ஆசிரியர். இந்த மூன்று பேருக்கும் ஒரு தனிமனிதரின் வாழ்வை மாற்றும் சக்தி இருக்கிறது. தாய் ஒரு குழந்தையைக் கருவில் சுமக்கலாம். தந்தை ஒரு குழந்தையைத் தோளில் சுமக்கலாம். ஆனால், எதிர்காலத்தில் ஒரு குழந்தை சொந்தக்காலில் நிற்க, ஆசிரியரே துணைநிற்க முடியும்.

என் நினைவில் ஓடிக்கொண்டிருக்கும் அனைத்து ஆசிரியர்களையும் நினைத்துப் பார்க்கிறேன். ஒன்றாம் வகுப்பில் துரைசாமி வாத்தியார், 2–ம் வகுப்பில் வெங்கடாசல வாத்தியார், 3–ம் வகுப்பில் மாரிமுத்து வாத்தியார், 4–ம் வகுப்பில் பெருமாள் வாத்தியார், 5–ம் வகுப்பில் சியாமளா டீச்சர், 6–ம் வகுப்பில் ஜெயா அம்மா, 7–ம் வகுப்பில் நாராயணசாமி வாத்தியார், 8–ம் வகுப்பில் சாமிநாத வாத்தியார், 9–ம் வகுப்பில் விமலா டீச்சர், 10–ம் வகுப்பில் கருப்பசாமி வாத்தியார், 11–ம் வகுப்பில் நஞ்சப்ப வாத்தியார், என்.சி.சி பயிற்சி கொடுத்த சுப்பையன் வாத்தியார், வணிகவியல் சொல்லிக் கொடுத்த நட்ராஜ் வாத்தியார் என எல்லோரும் என் நினைவில் ஓடிக் கொண்டிருக்கிறார்கள். இதைப் படிக்கும்போது உங்கள் மனக்கண்ணிலும் வரிசையாக உங்கள் ஆசிரியர்களின் நினைவலைகள் ஓடிக்கொண்டிருக்கும்.

நம்மைப் படைத்த சிவனுக்கே முருகன் ஆசிரியராக இருந்து பிரம்மத்தைச் சொல்லிக் கொடுத்திருக்கிறார். கம்பராமாயணத்தில் ராமரை சீதையின் தந்தையான ஜனக மகாராஜாவுக்கு விசுவாமித்திரர் அறிமுகப்படுத்தும்போது, ‘தசரதனுடைய மகன்’ என்று சொல்லாமல், ‘வசிஷ்டருடைய மாணவர்’ என்றே அறிமுகப்படுத்துகிறார்.

காஞ்சி மகாப் பெரியவரிடம் நிருபர்கள், “நீங்கள் இந்த மடாதிபதி பொறுப்பேற்று எப்போதாவது வருத்தப்பட்டிருக்கிறீர்களா?” என்று கேட்டிருக்கிறார்கள். அதற்கு மகா பெரியவர், “ஆமாம், வருத்தப்பட்டதுண்டு. எனக்குச் சொல்லிக் கொடுத்த ஆசிரியர் வரும்போது நான் எழுந்து அவரை வணங்க முடியவில்லையே என வருத்தப்பட்டிருகிறேன்” என்று பதில் தந்தார் அந்த மகான்.

‘கல்விதான் வாழ்வை உயர்த்தும்’ என்று மாறி இருக்கும் காலச்சூழலில், தாய் தகப்பனிடம் ஒரு குழந்தை வளர்வதைவிட, ஆசிரியர்களிடம் வளர்கிற நேரமே அதிகம். அதனால்தான் ஆசிரியர் தொழிலுக்கு மதிப்பும் மரியாதையும் அதிகம். ஆசிரியராகத் தன் வாழ்வைத் தொடங்கி இந்தியக் குடியரசுத் தலைவராக உயர்ந்த ராதாகிருஷ்ணன் அவர்களின் பிறந்த நாளான செப்டம்பர் 5–ம் தேதியை ஆசிரியர் தினமாகக் கொண்டாடுகிறோம். இந்தத் தருணத்தில் ஆசிரியர்களின் முக்கியத்துவத்தை உணர்த்திய மூன்று ஜனாதிபதிகளை நினைவில் கொள்வது அன்பாசிரியர்களைக் கௌரவிக்கும் செயலாக அமையும்.

‘மக்கள் என்னை ஒரு நல்ல ஆசிரியராக நினைத்தால், அது எனக்கு மிகப்பெரிய கௌரவமாக இருக்கும்’ என்று கூறினார் ஏ.பி.ஜே.அப்துல் கலாம் அவர்கள். இந்தியத் திருநாட்டின் ஜனாதிபதி, நாட்டையே அறிவியலை நோக்கிச் சிந்திக்க வைத்த விஞ்ஞானி, ஏவுகணை உருவாக்கி இந்தியாவுக்குச் சக்தி தந்த சாதனையாளர்... இந்த அடையாளங்களைவிட, ‘ஆசிரியர்’ என்கிற அடையாளத்தையே கலாம் அவர்கள் விரும்பினார். விஞ்ஞானியாக ஓய்வுபெற்ற பிறகும், ஜனாதிபதியாக ஓய்வுபெற்ற பிறகும் அவர் ஆசிரியர் பணியையே விரும்பித் தேர்ந்தெடுத்தார். ‘ஒரு நாட்டின் எதிர்காலம் வகுப்பறையில்தான் உதயமாகிறது’ என்பதை உணர்ந்தவர் அவர்.

ஓர் அன்பாசிரியர் எப்படி இருக்க வேண்டும் என்பதற்கு உதாரணமாக விளங்கியவர் முன்னாள் குடியரசுத் தலைவர் சங்கர் தயாள் சர்மா. அவர் அரசுமுறைப் பயணமாக ஓமன் நாட்டிற்குச் சென்றபோது, அந்த நாட்டு மன்னரான சுல்தான் காபூஸ் பின் சையத் விமான நிலையத்திற்கே வந்து வரவேற்றார். ‘இது மரபில்லையே, மன்னரே விமான நிலையத்திற்கு நேரில் சென்று வரவேற்கலாமா?’ என்று கேள்வி எழுப்பப்பட்டது. அதற்கு, “நான் இந்தியாவின் பூனா பல்கலைக்கழகத்தில் படிக்கும் போது எனக்கு ஆசிரியராக இருந்தவர் திரு. சங்கர் தயாள் சர்மா. என் ஆசிரியரை நான் மதித்து நேரில் சென்று வரவேற்றேன், ஜனாதிபதியை அல்ல” என்றார் சுல்தான். மாணவரின் மனதில் ஆசிரியரின் இடம் என்ன என்பதற்கான சான்று இந்த நிகழ்வு.

மூன்றாவதாக அமெரிக்க முன்னாள் ஜனாதிபதி ஆபிரகாம் லிங்கன் தன் மகனின் ஆசிரியருக்கு எழுதிய கடிதத்தின் சில முக்கிய அம்சங்களைக் குறிப்பிட விரும்புகிறேன்.

‘என் மகனுக்குப் புத்தகங்கள் என்ற அற்புத உலகத்தின் வாசல்களைத் திறந்து காட்டுங்கள். அதே வேளையில், இயற்கையின் ஈடில்லா அதியத்தை வியக்கவும் கற்றுக் கொடுங்கள். வானில் பறக்கும் பறவைகளின் சுதந்திரத்தையும், தேனீக்களின் சுறுசுறுப்பையும்,



பசுமையான மலையடிவார மலர்களின் அழகையும் ரசிக்கக் கற்றுத் தாருங்கள். ஏமாற்றுவதைவிடவும் தோல்வி அடைவது எவ்வளவோ மேலானது என்பதை உணர்த்துங்கள். சக மனிதர்களின் குரலுக்குச் செவிசாய்க்க வேண்டும் என அறிவுறுத்துங்கள். துயரமான வேளைகளில் சிரிப்பது எப்படி என்று அவனுக்குக் கற்றுக் கொடுங்கள். போலியான வாழ்வைக் கண்டால் எள்ளி நகையாடவும், வெற்று புகழுரைகளைக் கேட்டால் எச்சரிக்கையாக இருக்கவும் அவனுக்குப் பயிற்சி கொடுங்கள். சிறுமை கண்டால் கொதித்தெழும் துணிச்சலை அவனுக்கு ஊட்டுங்கள்' என்பதாக நீள்கிறது அந்தக் கடிதம்.

ஒரு பெற்றோராக, தன் மகன் எத்தகைய பெருமைமிக்க வாழ்வை வாழ வேண்டும் என்பதை விரும்பி, அதையெல்லாம் ஆசிரியர் மகனுக்குச் சொல்லிக்கொண்டுக்க வேண்டும் எனக் கேட்டுக்கொண்ட இந்தக் கடிதத்தில் ஒவ்வொரு மனிதருக்கும் தேவையான நற்பண்புகள் வெளிப்படுகின்றன.

'ஒருவர் கற்பிக்கும்போது, இருவர் கற்றுக்கொள்கிறார்கள்' என்று சொல்கிறார்கள். ஆசிரியர்கள் தொடர்ந்து கற்றுக்கொண்டே இருந்தால் மட்டுமே சிறந்த ஆசிரியர்களாக இருக்க முடியும். புத்தகத்திலிருந்து மட்டுமின்றி, இதயத்திலிருந்தும் கற்றுக்கொடுப்பவரே அன்பாசிரியராக மாணவர்களின் வாழ்வில் மாற்றத்தை ஏற்படுத்தமுடியும்.

அத்தகைய நல்லாசிரியர்களைத் தேர்ந்தெடுத்து, 'அன்பாசிரியர்கள்' எனப் பாராட்டிக் கௌரவப்படுத்தும் முயற்சியை ராம்ராஜ் காட்டன் நிறுவனம், இந்து தமிழ் திசை நாளிதழுடன் இணைந்து தொடர்ந்து செய்து வருகிறது. 'அன்பாசிரியர்' என்ற சொல்லே அர்த்தமுள்ள சொல். வழக்கமான வகுப்பறைகளைத் தாண்டித் தனித்துவமாகக் கற்பிக்கும் அரசுப் பள்ளி ஆசிரியர்களை அன்பாசிரியர்களாகத் தேர்வுசெய்து விருது வழங்குகிறோம்.

மாணவர்களுக்குத் தனித்துவமான கல்வியை அளிப்பதோடு நின்றுவிடாமல், அவர்களுக்கு நற்பண்புகளை ஊட்டி வளர்த்து, அவர்களின் திறனையும் வளர்க்கிறார்கள் அன்பாசிரியர்கள். சமூக அக்கறையுடன் செயல்படுவதோடு, பள்ளியையும் மேம்படுத்துகிறார்கள். இப்படிப்பட்ட ஆசிரியர்களை அடையாளம் கண்டு கௌரவப்படுத்தும் உன்னத முயற்சியில் ராம்ராஜ் காட்டன் நிறுவனம் துணை நிற்கிறது. தமிழ்நாடு அரசின் பள்ளிக்கல்வித்துறையுடன் இணைந்து இந்த அன்பாசிரியர் விருதை வழங்குகிறோம். இந்த ஆண்டும் தகுதியான சிறந்த ஆசிரியர்களை விருது வழங்கும் நிகழ்வில் சந்தித்து வாழ்த்தியது பெருமகிழ்ச்சி.

அன்புமிக்க ஆசிரியர்கள் பெருகினால், ஆரோக்கியமான சமுதாயம் உருவாகும். மாண்புமிக்க ஆசிரியர்களைப் போற்றுவதின் மூலம் எதிர்காலச் சந்ததியைச் சரியாக வழிநடத்துவோம்.

குரு அருள்

வாழ்க வையகம்... வாழ்க வளமுடன்!

**கே.ஆர்.நாகராஜன்**

**நிறுவனர் – ராம்ராஜ் காட்டன்**



# நேசத்துக்குரிய அன்பாசிரியர்கள்!

மலர்க்கொடி டீச்சர் என்றால் பள்ளியில் எல்லாப் பையன்களுக்கும் ரொம்ப பயம். அவர் கணக்குப் பாடம் நடத்தினால், கடைசி பெஞ்ச்சில் இருக்கும் மாணவர்களுக்கும் நன்கு புரியும். கண்டிப்புக்கும் பெயர் போனவர், வகுப்பறையில் சேட்டை செய்யும் பையன்களைப் பிரம்பால் பின்னி எடுத்துவிடுவார். அதே சமயம் அக்கறையாகவும் இருப்பார். தான் பாடம் எடுக்கும் பிளஸ் 1, பிளஸ் 2 வகுப்புகளில் இருக்கும் ஒவ்வொரு மாணவரின் பெற்றோரையும், குடும்பப் பின்னணியையும் அவருக்குத் தெரியும்.

பள்ளி மைதானத்தில் விளையாடும்போது யாருக்காவது காயம் பட்டால், பதறித் துடித்து மருந்து போட்டு ஆஸ்பத்திரிக்கு அனுப்பி வைப்பார். யாராவது காலை உணவு சாப்பிடாமல் வந்து சோர்ந்து பெஞ்ச்சில் படுத்தால், பள்ளிக்கு எதிரே இருக்கும் உணவகத்துக்கு அனுப்பிச் சாப்பிட வைப்பார். அந்த உணவகத்தில் இதற்காகவே அவர் பெயரில் தனியாக ஒரு கணக்கு இருக்கும். அவர் வாங்கும் சம்பளத்தில் கணிசமான தொகை இதற்கே போய்விடும்.

ஒருநாள் அலுவலகப்பணி இருந்ததால் சற்றுத் தாமதமாக வகுப்பு எடுக்க வந்தார். அவர் உள்ளே நுழையும்போது பார்த்த காட்சி அதிரவைத்தது. மாணவர்கள் இரண்டு குழுவாகப் பிரிந்து சண்டை போட்டுக்கொண்டிருந்தார்கள். ஒரே கூச்சலும் குழப்பமுமாக இருந்தது. டீச்சர் உள்ளே நுழைந்த அடுத்த நொடியில் வகுப்பறை சட்டென அமைதியானது. எல்லோரும் கலைந்து அவரவர் இடத்தில் போய் உட்கார்ந்தனர். பயத்தில் கண்ணீருடன் இருந்த மாணவிகளிடம் விசாரித்தார். அந்த ஊரின் இரண்டு பகுதிகளைச் சேர்ந்த இரண்டு மாணவர்களுக்குள் சாதாரணமாக ஆரம்பித்த கிண்டல் பேச்சு, இரண்டு பகுதி மாணவர்கள் மத்தியிலான கோஷ்டி மோதலாக மாறிவிட்ட துயரத்தைச் சொன்னார்கள்.

“இப்படிப் பாகுபாடு பார்க்கும் பிள்ளைகளாக உங்களை நான் வளர்க்கவில்லையே! ஒரே பெஞ்ச்சில் பக்கத்தில் உட்கார்ந்திருக்கும் மாணவனை எப்படி உங்களால் விரோதியாகப் பார்க்க முடிகிறது?” என்று கடுமையாக அவர் திட்டியதும் எல்லா மாணவர்களும் எழுந்து நின்று மன்னிப்புக் கேட்டார்கள். “இனிமேல் இப்படிச் சண்டை போடமாட்டோம்” என்று உறுதி கொடுத்தார்கள்.

அதைத் தொடர்ந்து அவர் பாடம் நடத்த ஆரம்பித்தார். மிகவும் சிக்கலான கணித விதியை அவர் விவரிக்க, வகுப்பறை மொத்தமும் நிசப்தமாக இருந்தது. நடந்த சண்டையின் தாக்கம் தீராத நிலையில் இந்தப் பாடம் யாருக்கும் புரியாது என்பது அவருக்குத் தெரிந்தது.

பாடத்தை நிறுத்திவிட்டு எல்லா மாணவ, மாணவிகளுக்கும் ஆளுக்கு ஒரு பேப்பரைக் கொடுத்தார். “ஒவ்வொருவரும் உங்களைத் தவிர இந்த வகுப்பில் இருக்கும் மற்ற எல்லோரது பெயரையும் வரிசையாக எழுதுங்கள்” என்றார். எல்லோரும் எழுதி முடித்தனர். “இப்போது அந்த ஒவ்வொருவர் பெயருக்கு அருகிலும், அவரிடம் நீங்கள் பார்த்த மிகச்சிறந்த பண்பு அல்லது ஏதேனும் அவரைப் பற்றிய சிறந்த விஷயத்தை எழுதுங்கள்” என்றார். ஒவ்வொரு மாணவரும், வகுப்பில் உள்ள சக மாணவ, மாணவிகள் அனைவரைப் பற்றியும் ஒரு சிறந்த விஷயத்தை எழுத வேண்டும். எல்லோரும் எழுதிக் கொடுக்க, பேப்பர்களை மொத்தமாக வாங்கிக்கொண்டு டீச்சர் கிளம்பினார்.

அந்த வார விடுமுறையில் டீச்சர் அந்த எல்லா பேப்பர்களையும் எடுத்தார். ஒரு மாணவனைப் பற்றி மற்ற எல்லா மாணவர்களும் எழுதிய எல்லாவற்றையும் கத்தரித்து ஒரு தாளில் ஒட்டினார். அதில், அந்த மாணவனைப் பற்றிச் சக மாணவர்கள் எல்லோரது அபிப்ராயங்களும் இருக்கும். இப்படி ஒவ்வொரு மாணவனுக்கும் ஒரு தாளை ரெடி செய்தார். அந்த மாணவனைப் பற்றிய தன் உயர்வான கருத்தையும் அதில் எழுதிக் கையெழுத்துப் போட்டார்.

திங்கள் கிழமை வகுப்புக்கு வந்ததும் அதை எல்லோருக்கும் கொடுத்தார். எல்லா மாணவர்களும் திகைத்துவிட்டனர். ‘நம்மை இவ்வளவு உயர்வாக சக மாணவர்கள் நினைக்கிறார்களா’, ‘நம்மை இவ்வளவு நேசிக்கிறார்களா’ என்று ஒவ்வொருவரும் பரவசமாகிவிட்டனர். அதன்பின் அந்த வகுப்பில் சண்டைகள் வரவில்லை. அவர்களுக்குள் பழகும்விதமே சிறப்பாக மாறியிருந்தது. எல்லோரும் முன்பைவிட நன்றாகப் படித்தனர்.

வருடங்கள் கடந்தன. மலர்க்கொடி டீச்சர் அதன்பின் மூன்று பள்ளிகளுக்கு மாறுதலாகி, இப்போது வேறொரு மாவட்டத்தில் பணிபுரிந்தார். ஒருநாள் திடீரென அந்த ஊரிலிருந்து ஒரு போன் அழைப்பு. “வசந்த் திடீரென இறந்துவிட்டான். நாளை அவனை அடக்கம் செய்கிறார்கள். அதற்கு நீங்கள் வர வேண்டும் என்று அவன் பெற்றோர் விரும்புகிறார்கள்” என்று அவருடன் அங்கு வேலை பார்த்த ஆசிரியர் ஒருவர் கூப்பிட்டார்.



அவருக்கு வசந்தை நினைவிருந்தது. அந்த வகுப்பில் சண்டையை ஆரம்பித்த இரண்டு பேரில் ஒருவன். அதன்பின் நன்றாகப் படித்து, பள்ளியில் முதல் மார்க் வாங்கி தேர்ச்சி பெற்றான். இந்திய ராணுவத்தில் அதிகாரியாகச் சேர்ந்தான். எல்லையில் தீவிரவாதிகள் தாக்குதலை முறியடிக்கும் சண்டை ஒன்றில் அவன் உயிரிழந்த தகவலை டீச்சர் செய்திகளில் பார்த்திருந்தார். பல ஆண்டுகளாகத் தொடர்பு இல்லாத நிலையில், அவனுக்காக மனசுக்குள் அஞ்சலி செலுத்தியிருந்தார். இப்போது அவன் குடும்பத்தினரே கூப்பிட்டதால் கிளம்பிப் போனார்.

வசந்த்தின் பெற்றோர், மலர்க்கொடி டீச்சரின் கைகளைப் பற்றிக் கண்ணீர் விட்டார்கள். டீச்சர் இறுதி அஞ்சலி செலுத்தியதும், சில ராணுவ அதிகாரிகள் அவரை நெருங்கினர். “நீங்கள்தான் வசந்த்தின் கணித டீச்சரா? உங்களைப் பற்றி அவன் நிறைய எங்களிடம் பேசியிருக்கிறான்” என்றவர்கள், ஒரு பர்ஸை அவரிடம் கொடுத்தார்கள். “இது வசந்த் பாக்கெட்டில் எப்போதும் இருக்கும். அவன் சாகும்போதுகூட இது அவனிடம் இருந்தது. இதில் இருக்கும் இந்தப் பேப்பரை அவன் தினம் ஒருமுறையாவது எடுத்துப் பார்த்துவிடுவான்” என்று எடுத்துக் காட்டினார்கள்.

மலர்க்கொடி டீச்சர் திகைத்துவிட்டார். வகுப்பறையில் சக மாணவர்கள் வசந்த்தைப் பற்றிப் பெருமையாக எழுதிக் கொடுத்த வாசகங்கள் ஒட்டிய பேப்பர். பலமுறை பிரித்து மடித்ததில் அது ஆங்காங்கே கிழிந்து டேப் ஒட்டியிருந்தது. “இதை அவன் பொக்கிஷம் மாதிரி நேசித்தான். இதுதான் அவன் வாழ்க்கையையே மாத்தினதா சொல்வான்” என்று அவர்கள் சொன்னார்கள்.

வசந்த்தின் வகுப்புத் தோழர்கள் பலரும் டீச்சரைச் சூழ்ந்து கொண்டார்கள். “என்னோட பேப்பரை நான் அழகா ஃபிரேம் போட்டு வீட்டில் மாட்டி வச்சிருக்கேன்” என்று ஒருவன் சொல்ல, “ஆபீஸ்ல என் டேபிள்ல அதுதான் பிரதானமா இருக்கும். அதைப் பார்த்துவிட்டுத்தான் தினமும் வேலைகளை ஆரம்பிப்பேன்” என்றான் இன்னொருவன். அநேகமாக அவர்களில் எல்லோருமே அதைப் பத்திரமாக வைத்திருப்பது டீச்சருக்குப் புரிந்தது. சாதாரணமாகச் செய்த ஒரு விஷயம் இவ்வளவு ஆழமாக மாணவர்களை மாற்றியிருப்பதை உணர்ந்து டீச்சர் அழ ஆரம்பித்தார்.

நல்திசை காட்டும் அன்பாசிரியர்களைப் பணிந்து வணங்குவோம். ●

## அனுபவங்களைப் படிக்கலாம்!

ஒரு கம்ப்யூட்டரிலிருந்து இன்னொரு கம்ப்யூட்டருக்குத் தகவல்களை மாற்றுவது போல, அறிவைத் தன் மூளையிலிருந்து மாணவனின் மூளைக்கு மாற்றிவிடுவது ஆசிரியரின் பணி அல்ல! கப்பலுக்குக் கலங்கரை விளக்கம் திசை காட்டிக் கரைக்குப் பாதுகாப்பாக வரச் சொல்வது போல, அறிவின் திசையைக் காட்டுபவரே ஆசிரியர்.

பள்ளியிலும் கல்லூரியிலும் படிக்கும் மாணவர்களுக்குப் பல குழப்பங்கள் இருக்கும். சிலருக்கு 'எப்படி ஜெயிக்கலாம்' என்பது தெரியாது. சிலருக்கு 'நாம் ஜெயிப்போமா' என்பதுகூடத் தெரியாது. எல்லோருக்கும் நம்பிக்கை கொடுத்து, வாழ்வில் வெற்றிகரமான மனிதர்களாக அவர்களை மாற்றுபவர்கள் ஆசிரியர்களே! நல்லாசிரியர்களின் அனுபவங்களைப் பெற முடிந்த மாணவர்கள் பாக்கியசாலிகள்.





## ஆசிரியரின் அவதாரங்கள்!

ஓர் அன்பாசிரியர் பல அவதாரங்களை எடுக்கிறார். தன் வகுப்பில் இருக்கும் 40–க்கும் மேற்பட்ட குழந்தைகளுக்கு அன்னையாகவும் தந்தையாகவும் அவர் இருக்கிறார். அவர்கள் வாழ்க்கையில் எப்படி வர வேண்டும் என்பதற்கு தன் வாழ்க்கையையே உதாரணமாகக் காட்டும் ரோல் மாடலும் அவர்தான். அவர்களை ஊக்கப்படுத்தி படிக்கவைக்கும் உந்துசக்தியும் அவர்தான். நல்ல நண்பராகவும், அக்கறையாக அவர்களைக் கவனித்துக்கொள்ளும் பாதுகாவலராகவும் இருக்கிறார். அவர்களின் எதிர்கால வாழ்க்கைக்கு வழிகாட்டியும் அவர்தான். அவர்களுக்கு ஏற்படும் பிரச்னைகளுக்குத் தீர்வு சொல்லி உதவுகிறவரும் அவர்தான். எல்லாக் கேள்விகளுக்கும் தங்கள் ஆசிரியரிடம் பதில் இருக்கிறது என்று குழந்தைகள் நம்புவதால், அவர்கள் தேடும் கூகுளும் அவர்தான்!

## வகுப்பறை கடந்த வழிகாட்டி!

வகுப்பறையில் பாடம் சொல்லிக் கொடுப்பதோடு ஓர் ஆசிரியரின் பணி நிறைவடைவதில்லை. தன்னிடம் பயில்கிற மாணவர்கள் எந்தச் சூழலிலிருந்து வருகிறார்கள் என்பதை அறிவதும், அவர்கள் கல்வி கற்பதற்குத் தடையாக உள்ள விஷயங்களை மாணவர்களுடன் இணைந்து தகர்ப்பதும், நம்பிக்கை இழக்கிற மாணவர்களுக்கு உறுதுணையாக இருந்து வழிநடத்துவதும் ஆசிரியரின் முக்கியப் பணி.

தனியார் பள்ளிகளில் பயில்கிற மாணவர்களுக்குப் பெற்றோர்களின் வழிகாட்டலும், கல்வி கற்கத் தேவையான வசதி வாய்ப்புகளும் எளிதில் கிடைக்கும். அங்கு ஆசிரியரின் பங்களிப்பு வகுப்பறையில் பாடம் நடத்துவதோடு நின்றுவிட்டாலும், தனியார் பள்ளி மாணவர்கள் தங்களுக்கான வாய்ப்புகளைத் தேடி அடைந்துவிட முடியும். அரசுப் பள்ளிகளில் அது சாத்தியமில்லை. ஏழ்மையும் வறுமையும் சுழற்றியடிக்கிற வாழ்விலிருந்து தங்களுக்கான விடியலை மாணவர்கள் அரசுப் பள்ளிகளில்தான் தேடுகின்றனர். அந்த மாணவர்களுக்கு இருக்கும் ஒரே வழிகாட்டி, ஆசிரியர்தான். அதனால், வகுப்பறை கடந்து அரசுப்பள்ளி மாணவர்களைப் புரிந்துகொள்பவரே அன்பாசிரியராகத் திகழ முடியும்.



## கேள்விகள் கேட்டு பாடம் தந்தவர்!



உலகின் டாப் பணக்காரர்களில் ஒருவரான 'மைக்ரோசாஃப்ட்' நிறுவனர் பில் கேட்ஸ், தன் மிகச்சிறந்த ஆசிரியர் என்று ஒருவரைக் குறிப்பிடுகிறார். அவருக்கு கம்ப்யூட்டர் நுட்பங்களைக் கற்றுத் தந்தவரையோ, பணம் சம்பாதிக்க வழிகாட்டியவரையோ, பிசினஸ் சூட்சுமங்களைச் சொல்லிக் கொடுத்தவரையோ அப்படிக் குறிப்பிடவில்லை. மாறாக, தனது ஆரம்பப் பள்ளியில் இருந்த நூலகரான பிளாஞ்ச் காஃபீர் என்பவரைத்தான் சிறந்த ஆசிரியர் என்கிறார்.

பள்ளி வயதில் பில் கேட்ஸ் ரொம்பவே கூச்ச சுபாவம் உள்ளவர். கையெழுத்தும் கிறுக்கலாக இருக்கும், சராசரியாகவே மார்க் எடுக்கிற மாணவர், தன் மனதில் இருக்கும் எதையும் வெளியில் சொல்லமாட்டார். அதோடு, நூலகத்தில் போய் அவர் எடுத்துப் படிக்கிற புத்தகங்கள் பலவும் பெண்களுக்கானவையாக இருக்கும்.

"நூலகர் பிளாஞ்ச் என்னை அரவணைத்துக்கொண்டார். 'புத்தகம் படிப்பது நல்ல விஷயம், அது பெண்களுக்கான புத்தகமாக இருந்தாலும் பரவாயில்லை' என்றார். எனக்கு என்ன மாதிரி புத்தகங்கள் பிடிக்கும் என்று கேட்டு, அவற்றை எங்கெங்கோ இருந்து வாங்கி வந்து கொடுப்பார். படித்து முடித்து திருப்பிக் கொடுக்கும்போது, 'அந்தப் புத்தகத்தில் எது உனக்குப் பிடித்திருந்தது' என்று கேட்பார். 'அதைப் படித்து என்ன கற்றுக்கொண்டாய்' என்றும் கேட்பார். அவரது கேள்விகள்தான் என்னை நிறைய படிக்கவும், நிறைய கற்றுக்கொள்ளவும் வைத்தன. அது என் வாழ்வையே மாற்றியது" என்கிறார் பில் கேட்ஸ்.

நல்லாசிரியர்கள் உங்கள் வாழ்வை மாற்றுகிறார்கள்.

## பங்குபெறச் செய்யுங்கள்!




இரண்டு ஆசிரியர்களைக் கற்பனை செய்யுங்கள். ரவி என்கிற முதல் ஆசிரியர், நேரத்துக்குச் சரியாக வகுப்புக்கு வந்துவிடுவார். இன்று நடத்த வேண்டிய பாடத்துக்கான குறிப்புகளை நேற்றே வீட்டில் முறையாகத் தயாரித்து வைத்திருப்பார். அரசு நிர்ணயித்த நாட்களுக்குள் பாடங்களை நடத்தி முடிப்பார். ஒவ்வொரு பாடம் நடத்தும்போதும், மாணவர்களைக் குறிப்பு எழுதிக்கொள்ளச் சொல்வார். தினமும் ஹோம் ஒர்க் கொடுத்து, மாணவர்களின் நோட்டுகளை வாங்கித் திருத்துவார். முறையாகத் தேர்வுகள் வைப்பார். ரொம்ப ஸ்ட்ரிக்ட்டாக மார்க் போடுவார். குறைந்த மார்க் வாங்குகிறவர்களையும், "ஏன் சரியாக மார்க் வாங்கவில்லை" என்று கேட்பதில்லை. அதிக மார்க் வாங்கியவர்களையும் பாராட்டுவதில்லை.

மோகன் என்ற இன்னொரு ஆசிரியர் இப்படி இல்லை. அவர் பாடக்குறிப்பு எதுவும் எடுத்து வருவதில்லை. பாடம் நடத்தும்போது பல விஷயங்கள் பேசுவார். ஆழ்ந்து கவனித்தால், மாணவர்கள் படிக்கும் அந்தப் பாடம் வாழ்க்கையில் எங்கெல்லாம் பயன்படும் என்பது குறித்து அவர் பேசுவது புரியும். அவர் வகுப்பில் மாணவர்கள் மகிழ்ச்சியாக இருப்பார்கள். கேள்விகள் நிறைய கேட்பார். சுயமாக யோசித்துப் பதில்கள் சொல்லச் சொல்வார். தன்னம்பிக்கையுடன் உரையாடும் மாணவர்களைப் பாராட்டுவார். சோர்வாக இருக்கும் மாணவர்களைத் தனியாகக் கூப்பிட்டு அக்கறையுடன் விசாரிப்பார்.

முதல் ஆசிரியர் தன் கடமையைச் சரியாகச் செய்கிறார்தான். ஆனால், ஓர் ஆசிரியர் சரியாகப் பாடம் நடத்துவது மட்டுமே முக்கியம் இல்லை, மாணவர்களை எப்படிக் கற்றுக்கொள்ள வைக்கிறார்கள் என்பதும் முக்கியம். மாணவர்கள் உற்சாகமாகப் படிக்க வரவேண்டும், வகுப்பறை உரையாடல்களில் அவர்கள் பங்குபெற வேண்டும், தங்கள் திறன்களை வெளிப்படுத்த அவர்களுக்கு வாய்ப்பு தர வேண்டும். இதையெல்லாம் செய்யும் இரண்டாவது ஆசிரியரே அன்பாசிரியர்.

# வாழ்க்கை முழுக்க வழிகாட்டுங்கள்!

தன் சொந்தச் செலவில் அரசுப் பள்ளியில் ஸ்மார்ட் கிளாஸ் வசதி செய்துதந்த ஆசிரியர்… நண்பர்களின் உதவியைப் பெற்று ஆரம்பப் பள்ளியில் எல்லா மாணவர்களுக்கும் டேபிள் சேர் போட்ட ஆசிரியர்… மாணவர்கள் பள்ளிக்கு வருவதற்காகப் புதிதாக ஆட்டோ வாங்கிய ஆசிரியர்… கொரோனா நாட்களில் பிள்ளைகள் ஆன்லைன் வகுப்பில் படிக்க வேண்டும் என்று தன் வகுப்பில் எல்லோருக்கும் ஸ்மார்ட் போன் வாங்கிக் கொடுத்த ஆசிரியர்… இப்படி நூற்றுக்கணக்கான நல்லாசிரியர்கள் நம்மைச் சுற்றி இருக்கிறார்கள். பள்ளி நாட்களைத் தாண்டி வாழ்க்கை முழுக்கவும் அவர்கள் தங்கள் மாணவர்களுக்கு வழிகாட்டுகிறார்கள். அவர்களிடம் இருக்கும் சில பொதுவான பண்புகள்…

● 'இந்தக் காலத்து பசங்களே இப்படித்தான்' என்று பொதுப்படையாக எல்லோரையும் பழிப்பதும் கிடையாது. 'என் பசங்க எல்லோரும் புத்திசாலிங்க' என்று ஒட்டுமொத்தமாக எல்லோரையும் பாராட்டுவதும் கிடையாது. ஒருவர் செய்யும் தவறுக்கோ, ஒருவர் செய்யும் சாதனைக்கோ, அவரை மட்டுமே பொறுப்பாளி ஆக்குகிறார்கள்.

● மாணவர்களின் ஆர்வமும், அவர்கள் கேள்விகளைக் கேட்கும் வேகமுமே கற்றலின் அடிப்படைகள் என்பதை அவர்கள் உணர்ந்திருக்கிறார்கள். பாடம் நடத்தும்போது மாணவர்கள் சோர்வாக இருந்தாலோ, பதில் சொல்லாமல் போனாலோ, தாங்கள் கற்றுத் தரும் முறையை மாற்றுகிறார்கள்.

● 'புரிகிறதா' என்று கேட்டதும் எல்லா மாணவர்களும் தலையை ஆட்டுவார்கள். அதை இந்த ஆசிரியர்கள் நம்புவதில்லை. புத்திசாலி மாணவன், ஓரளவு படிக்கும் மாணவன், சராசரி மாணவன், சுமார் மாணவன் என்று நான்கைந்து பேரிடம் கேள்விகள் கேட்டு உறுதிசெய்த பிறகே அடுத்த பாடத்துக்குப் போகிறார்கள்.

● ஒவ்வொரு மாணவனின் கற்கும் திறனும் வேறானது என்பது அவர்களுக்குத் தெரியும். மாணவர்களுக்கு முன்னால் போய் நின்று பாடத்தை ஒட்டுமொத்தமாகச் சொல்லித் தருவதைவிட, ஒவ்வொருவருக்கும் ஏற்றபடி உரையாடிக் கற்றுத் தருவதையே விரும்புவார்கள்.

● தேவையின்றிக் கோபப்பட மாட்டார்கள். கத்திப் பேசித் திட்டமாட்டார்கள். எல்லா நேரங்களிலும் அவர்கள் முகத்தில் புன்னகை இருக்கும். அப்படி இருந்தால்தான் குழந்தைகள் தங்களிடம் நெருங்கி வருவார்கள் என்பது அவர்களுக்குத் தெரியும். மாணவர்கள் கல்வி பயிலும் வேகத்தைவிடச் சிந்திக்கும் திறனுக்கு அவர்கள் முக்கியத்துவம் கொடுப்பார்கள். வித்தியாசமாகச் சிந்திக்கும் குழந்தைகளை அவர்கள் பாராட்டி ஊக்குவிப்பார்கள்.

● வகுப்பில் இருக்கும் குழந்தைகளின் பெயர்களைச் சீக்கிரமே அறிந்துகொண்டு, அந்தப் பெயர் சொல்லியே அழைப்பார்கள். உருவ கேலி செய்வது, பட்டப்பெயர் வைப்பது என்றெல்லாம் செய்யமாட்டார்கள். குழந்தைகளிடையே எதைக் காரணமாக வைத்தும் பாகுபாடு காட்டமாட்டார்கள்.

● தாங்கள் படித்த காலம் போல இல்லாமல் வேறொரு காலத்தில் இன்றைய குழந்தைகள் வளர்கிறார்கள் என்பது அவர்களுக்குத் தெரியும். "நாங்க எல்லாம் அந்தக் காலத்துல" என்று பழம்பெருமை பேசாமல், இன்றைய காலத்துக்குத் தேவைப்படும் விஷயங்களையே சொல்லித் தருவார்கள்.

● எல்லா விஷயங்களையும் உடனே தலைகீழாக மாற்றுவதற்கு ஆசைப்பட மாட்டார்கள். அது மாணவர்களைப் பயமுறுத்திவிடும் என்பது அவர்களுக்குத் தெரியும். கொஞ்சம் கொஞ்சமாகப் பழக்கப்படுத்தி மாற்றத்தை அமல் செய்வார்கள். அது மாணவர்களுக்கு நன்மையே தரும்.

● 'மாணவர்களுக்குப் பாடங்களைப் போதிப்பது நம் வேலை இல்லை, அவர்களின் கற்றலுக்கு உதவி செய்வதே நம் பணி' என்பதை அவர்கள் உணர்ந்திருப்பார்கள். அதற்கு முழுப்பொறுப்பு ஏற்பார்கள். ஒவ்வொரு மாணவனும் தன் முழுத் திறனை அடையாளம் காண உதவுவார்கள். ●








# அன்பாசிரியர் விருது விழாவில் ராம்ராஜ்!

அரசு மற்றும் அரசு உதவி பெறும் பள்ளிகள், மெட்ரிக் பள்ளிகளில் பயிலும் மாணவர்களுக்கு வழக்கமான பாடம் கற்பிப்பதோடு நின்றுவிடாமல், மாணவர்கள் மீது பேரன்பும், அவர்களின் வளர்ச்சி குறித்த அக்கறையும் கொண்ட ஆசிரியர்களைக் கௌரவிக்கும் வகையில் 'இந்து தமிழ் திசை' நாளிதழுடன் இணைந்து, ராம்ராஜ் காட்டன் நிறுவனம் 2020–ம் ஆண்டு முதல் 'அன்பாசிரியர்' விருது வழங்கி வருகிறது.

மூன்றாவது ஆண்டாக 'அன்பாசிரியர் 2022' விருதுகளுக்குத் தமிழகம், புதுச்சேரியைச் சேர்ந்த 600 ஆசிரியர்கள் விண்ணப்பித்தனர். இதில் 350 பேர் முதல்கட்ட நேர்காணலுக்கு அழைக்கப்பட்டனர். அதில் தேர்வு செய்யப்பட்டவர்கள் இறுதிச்சுற்றில் கலந்துகொண்டனர். இறுதியாக மூத்த கல்வியாளர்கள் அடங்கிய தேர்வுக்குழு மூலமாக 35 ஆசிரியர்கள் 'அன்பாசிரியர்' விருதுக்கும், 6 ஆசிரியர்கள் 'முன்மாதிரி அன்பாசிரியர்' விருதுக்கும் தேர்வாகினர்.

இந்த 41 ஆசிரியர்களுக்கு விருது வழங்கும் விழா சென்னையில் நடைபெற்றது. விழாவில் 'இந்து தமிழ் திசை' நாளிதழ் நிர்வாகிகள், ஆசிரியர் குழுவினர் பங்கேற்றனர். 'பிரம்மோஸ்' ஏவுகணை மூலம் உலகையே திரும்பிப் பார்க்க வைத்த விஞ்ஞானி திரு. ஏ.சிவதாணுபிள்ளை, ராம்ராஜ் காட்டன் நிறுவனர் திரு. கே.ஆர்.நாகராஜன் ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாகக் கலந்துகொண்டனர். தமிழகப் பள்ளிக்கல்வித் துறை அமைச்சர் மாண்புமிகு அன்பில் மகேஸ் பொய்யாமொழி அவர்கள் முதன்மை விருந்தினராகக் கலந்துகொண்டு, 41 ஆசிரியர்களுக்கும் விருதுகளை வழங்கினார்.

திரு. கே.ஆர்.நாகராஜன் உரையாற்றும்போது, "தமிழ்நாடு முழுவதும் இருக்கக்கூடிய ஆசிரியர்களில் மிகச் சிறப்பானவர்களைத் தேர்ந்தெடுத்து, அவர்களை உற்சாகப்படுத்தி, நம் தமிழ்நாடு பள்ளிக் கல்வித்துறை அமைச்சரின் கரங்களால் விருது பெறுவது என்பது சாதாரண விஷயம் அல்ல. அதை இங்கு செய்திருக்கிறோம். என்னை வளர்த்தெடுத்த ஆசிரியர்களுக்கெல்லாம் விருது கொடுக்க நினைத்தேன். என்னால் முடியவில்லை. ஆகையால் இப்படி ஒரு நிகழ்ச்சியில் பங்கெடுத்துக்கொள்ள இந்து தமிழ் திசை நாளிதழ் ஒரு வாய்ப்பைக் கொடுத்திருக்கிறது. அன்பாசிரியர் விருது பெறுவோர், அவர்களின் குடும்பத்தினர் அனைவரும் எல்லாம் வல்ல இறையருளால் உடல்நலம், நீள் ஆயுள், நிறை செல்வம், உயர்புகழ், மெய்ஞானம் பெற்று ஓங்கி வாழ்க வளமுடன்" என்று வாழ்த்தினார்.

மாண்புமிகு அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி, "அரசுப் பள்ளி என்பது வறுமையின் அடையாளம் அல்ல; பெருமையின் அடையாளம். இந்த வாக்கியத்துக்குக் காரணமாக இருப்பவர்கள் அரசுப் பள்ளி மாணவர்கள்தான். அவர்களை உருவாக்குகிறார்கள் அன்பாசிரியர்கள். ஆசிரியர்களே நம்மை ஏற்றிவிடும் ஏணி. நம்மை ஏற்றிவிடுகின்ற ஏணியாக இருக்கும், நாம் படித்த பள்ளிக்கூடங்களையும், ஆசிரியர்களையும் என்றைக்கும் மறந்துவிடக் கூடாது என்பதை மாணவர்கள் மனதில் வைத்துக்கொள்ள வேண்டும்" என்று குறிப்பிட்டார்.

**(அன்பாசிரியர் விருது பெற்ற ஆசிரியர்கள் விவரம்: நடுப்பக்கத்தில்)**

‘ஆசிரியர்களே மாணவர்களின் முதல் ரோல்மாடல்கள். ஏனெனில், ஆசிரியர் என்ற சாளரம் வழியாகவே குழந்தைகள் தங்களின் எதிர்காலத்தைப் பார்க்கின்றன’ என்று ஒரு பொன்மொழி உண்டு. அப்படிப்பட்ட ரோல்மாடல் ஆசிரியர் ஒருவரைப் பற்றிய சம்பவம் இது…

ஒரு மாணவன் பத்தாம் வகுப்பில் முதல் மதிப்பெண் வாங்கியிருந்தான். பள்ளியில் எல்லா ஆசிரியர்களும் அவனைப் பாராட்டினார்கள். தலைமை ஆசிரியர் அவனை அழைத்துப் பாராட்டினார். “அடுத்து என்ன செய்யப்போகிறாய்?” என்று கேட்டார். “பாலிடெக்னிக் போன்ற வேறு படிப்புகளில் சேரவோ அல்லது குறைந்தபட்சம் இதே பள்ளியில் மேல்நிலை வகுப்பு சேர்ந்து படிக்கவோகூட என்னால் முடியாது சார். எனக்கு ஃபீஸ் கட்டி, புத்தகங்கள் வாங்கித் தந்து பள்ளிக்கு அனுப்பும் அளவுக்கு என் குடும்பத்தில் வசதி இல்லை” என்றான். ஃபீஸ் இல்லாமல் அவனைச் சேர்த்துக்கொள்ள முடியாது என்று தன் இயலாமையை அவர் சொல்லிவிட்டார். அவன் தங்கையும் படிப்பைத் தொடர முடியவில்லை.

ஏமாற்றத்துடன் வீடு திரும்பிய அவன், பங்க்சர் ஒட்டும் கடை ஒன்றில் வேலைக்குச் சேர்ந்தான். சில நாட்களுக்கு முன்பு இறந்துபோன அவன் தந்தை, அந்தக் கடையில்தான் வேலை பார்த்துவந்தார். நான்கு வீடுகளில் வீட்டு வேலை பார்த்துக் குடும்பத்தை நடத்தும் அம்மாவுக்கு தன்னால் இயன்ற உதவியைச் செய்யவே இந்த வேலைக்குப் போனான். ஆனால், படிக்க வேண்டும் என்ற ஆசை அவன் மனம் முழுக்க நிரம்பியிருந்தது. அவன் பள்ளி நண்பர்கள் வேறு அவனை வந்து பார்த்து வருத்தப்பட்டார்கள்.

மூன்று நாட்கள் கழித்து அவனைத் தலைமை ஆசிரியர் கூப்பிட்டதாகச் சக மாணவன் ஒருவன் வந்து சொன்னான். தொடர்ந்து படிக்க இயலாததால் டி.சி கொடுக்கக் கூப்பிடுகிறார் என்று நினைத்துக்கொண்டு அம்மாவுடன் போனான். தலைமை ஆசிரியர் அவர்களைக் கூப்பிட்டுப் பேசினார். “நல்லா படிக்கிற பையனைத் தொடர்ந்து படிக்க வையுங்கம்மா! கஷ்டத்துல இருந்தாலும் கல்வியை மறந்துடாதீங்க. அவன் வளர்ந்து பெரிய ஆளாகி உங்களை நல்லபடியா பார்த்துப்பான்” என்றார்.


“நான் சம்பாதிக்கிறது வீட்டு வாடகைக்கும், இவனுக்கும் இவன் தங்கச்சிக்கும் சாப்பாடு போடறதுக்குமே சரியா போகுது. நான் எப்படி படிக்க வைக்கறது?” என்றார் அம்மா. “இங்க பாருங்கம்மா, அரசாங்க ஃபீஸ் ரொம்ப குறைச்சல்தான். இவனுக்கும் இவன் தங்கச்சிக்கும் ஃபீஸ் கட்டியாச்சு. ரெண்டு பேருக்கும் புத்தகங்கள், இந்த வருஷம் முழுக்கத் தேவையான நோட்டுகள், மூணு செட் யூனிஃபார்ம் எல்லாம் ரெடி. நடுவுல வேற ஏதாவது செலவு வந்தாலும் பார்த்துக்குவாங்க. ரெண்டு பேரும் வந்து படிச்சா மட்டும் போதும்” என்றார் தலைமை ஆசிரியர்.

‘‘யாருங்க ஐயா கட்டினது?’’ என்று அவன் ஆச்சர்யத்துடன் கேட்டான். ‘‘இல்லப்பா, அதை வெளிப்படுத்திக்க அவர் விரும்பலை” என்று மறுத்தார் அவர். அம்மா அவருக்குக் கைகூப்பி நன்றி சொன்னார்.

அடுத்த இரண்டு ஆண்டுகளுக்கு அவனுக்கு ஒரு பென்சில் தேவை என்றாலும், சரியாகப் பள்ளி ஆபீஸிலிருந்து வந்துவிடும். அவனுக்கு ஆச்சர்யமாக இருக்கும். இந்தக் கேள்விக்கு விடை தெரியாவிட்டாலும், பாடத்தில் எல்லாக் கேள்விகளுக்கும் அவனுக்குப் பதில் தெரியும். வெறித்தனமாகப் படித்தான். பள்ளித் தேர்வுகளுக்கு முன்பாகவே அவன் சில நுழைவுத் தேர்வுகள் எழுத வைக்கப்பட்டான். அதற்காகப் பக்கத்து நகரத்தில் சில நாட்கள் போய் பயிற்சி எடுத்தான். எல்லாவற்றுக்கும் அந்த ‘யாரோ’ செலவு செய்திருந்தார்.

இந்தியாவின் புகழ்பெற்ற உயர்கல்வி நிறுவனத்தில் அவனுக்கு எஞ்சினியரிங் படிக்க வாய்ப்புக் கிடைத்தது. மகிழ்ச்சியுடன் தலைமை ஆசிரியர் அறைக்குச் சென்ற அவன், “இப்போதாவது சொல்லுங்கள் சார், என்னை யார் படிக்க வைத்தது? அவருக்கு நன்றி சொல்லாவிட்டால் என்னால் தூங்க முடியாது” என்றான்.

தலைமை ஆசிரியர் உண்மையைச் சொன்னார். அவனுடைய ஆங்கில ஆசிரியரான கோபால் சார், தன் சம்பளத்திலிருந்து இத்தனைக் காலமும் அவனுக்கும் அவன் தங்கைக்கும் செலவு செய்துகொண்டிருந்தார். உடனே அவரைத் தேடிப் போனான். ஆசிரியர்கள் ஓய்வறையில் தனியாக அமர்ந்திருந்த அவர் கால்களில் போய் விழுந்து கண்ணீர் விட்டான். உயர்கல்வி படிக்க வாய்ப்புக் கிடைத்ததைச் சொன்னான். “ஏன் எனக்காக இத்தனை சிரமப்பட்டீர்கள்?” என்று கேட்டான். “பிளஸ் ஒன் வகுப்பு தொடங்கியதும் உன்னைக் காணோமே என விசாரித்தேன். நீ நின்றுவிட்டதாகச் சொன்னார்கள். நல்லா



# முன்னுதாரண ஆசிரியர்!


படிக்கிற பையன், எதிர்காலம் வீணாகிடக்கூடாதே என்றுதான் அக்கறை காட்டினேன். இனி நீ பிழைத்துக்கொள்வாய். உனக்கு இப்போது ஸ்காலர்ஷிப் கிடைக்கும், ஹாஸ்டலில் தங்கலாம். அதுபோக மற்ற செலவுகள் பெரிதாக இருக்காது. அதை நான் பார்த்துக்கொள்கிறேன். நீ படிப்பில் மட்டும் கவனம் செலுத்து" என்று ஆசீர்வதித்தார்.

ஆண்டுகள் கடந்தன. படிப்பு முடிந்ததும் அவனுக்கு ஜெர்மனியில் வேலை கிடைத்தது. ஆண்டுக்குப் பல லட்சங்கள் சம்பளம். அதை அம்மாவிடம் சொல்வதற்கு முன்பாகத் தன் ஆசிரியரிடம் வந்து சொன்னான். "நான் சம்பாதிக்க ஆரம்பித்ததும் உங்களுக்குப் பெரிதாக ஏதாவது செய்ய விரும்புகிறேன், தயவுசெய்து மறுக்காதீர்கள்" என்று கும்பிட்டான். கோபால் சார் சிரித்தார். "பிரதிபலன் எதிர்பார்த்து நான் இதைச் செய்யவில்லை. சம்பாதித்து உன் அம்மாவைக் கவனித்துக்கொள். அவருக்கு ஓய்வு கொடு, உன் தங்கைக்கு நல்ல கல்வி கொடு. இருவருக்கும் நல்ல வாழ்க்கை அமைத்துக் கொடு. உன் வேலைக்குத் தகுதியுள்ள வசதிகளை உனக்கு உருவாக்கு. இந்த எல்லாவற்றையும் செய்து முடிக்கும்போது உன் கையில் பணம் மிச்சமிருக்கும். உன்னைப் போலப் பணம் இல்லாமல் உயர்கல்வி வாய்ப்புக்கு ஏங்கித் தவிக்கும் புத்திசாலி மாணவர்களுக்கு உதவி செய். நான் செய்த உதவியை நீ இப்படித் திருப்பிக் கொடுத்தால் நான் மகிழ்வேன்" என்று சொல்லி அவனை அரவணைத்துக் கொண்டார். 30 ஆண்டுகள் கடந்தும் அதை கோபால் சார் பெயரால் செய்துகொண்டிருக்கிறான் அந்த மாணவன்.

நமக்குப் பள்ளி நாட்களைப் பல ஆண்டுகள் கழித்து நினைத்துப் பார்த்தால், சில மாணவர்களைத் தவிர மற்ற பெயர்கள் நினைவில் இருப்பதில்லை. ஆனால், ஒவ்வொரு வருடமும் தன்னிடம் படித்தவர்கள் என்று நூற்றுக்கணக்கான மாணவர்கள் பெயரை வாழ்நாள் முழுக்க நினைவில் வைத்திருப்பார் ஆசிரியர்.

எல்லா ஆசிரியர்களையும் மாணவர்கள் ஆயுள் முழுக்க நினைத்துப் பார்ப்பதில்லை. தன் வகுப்பறையில் இருக்கும் மாணவன் எப்படிப் படிக்கிறான் என்பதைத் தாண்டி, அவன் எங்கிருந்து வருகிறான், எப்படிப்பட்ட சூழல்களை எதிர்கொண்டு வருகிறான் என்பதையெல்லாம் சில ஆசிரியர்கள்தான் கவனிக்கிறார்கள். அவர்கள் தங்கள் மாணவர்களைத் தங்களைவிட உயர்வான இடத்துக்குக் கொண்டு செல்கிறார்கள். அதனால்தான் அவர்கள் எப்போதும் நேசிக்கப்படுகிறார்கள்.







# நம்பிக்கை விதைக்கும் நல்லாசிரியர்!



'இந்த வரியை உங்களால் படிக்க முடிகிறது என்றால், உங்கள் ஆசிரியருக்கு நன்றி சொல்லுங்கள்' என்கிறது அமெரிக்கப் பழமொழி ஒன்று. இதைத்தான் கவனிக்க வேண்டும்' என்று உங்கள் பார்வையைக் குறுக்கிவிடாமல், உலகத்தையே பார்ப்பதற்குக் கற்றுக்கொடுப்பவர்களே நல்லாசிரியர்கள். அதேபோல உங்களுக்குள் ஆழ்ந்து சென்று பார்த்து, உங்களை அறிந்துகொள்ளவும் வழிகாட்டுகிறார்கள். நம் திறமை மீது நமக்கே நம்பிக்கை இல்லாத சூழலிலும், அவர்கள் முழுமையாக நம்புகிறார்கள்.

இதற்கு உதாரணம், லெஸ் பிரவுன் வாழ்வில் நடந்த சம்பவம். உலகப் புகழ்பெற்ற தன்னம்பிக்கை பேச்சாளர் லெஸ் பிரவுன். அவரது உரையைக் கேட்டுப் பலரின் வாழ்க்கையே மாறியிருக்கிறது. இன்று லட்சங்களில் சம்பாதிக்கும் பிஸியான பேச்சாளராக அவர் இருக்கிறார்.

ஆனால், அவரின் இளமைக்காலம் துயரமானது. அமெரிக்காவில் ஏழைக் குடும்பம் ஒன்றில் பிறந்தவர் அவர். சொந்தமாக வீடுகூட இல்லாமல், பாழடைந்த பழைய கட்டடம் ஒன்றில் அவர்கள் குடும்பம் வசித்தது. பள்ளியிலும் அவரால் சரியாகப் படிக்க முடியவில்லை. 'கற்றல் திறன் குறைபாடுள்ள குழந்தை' என்று அவருக்கு முத்திரை குத்தப்பட்டது. இரட்டையராக அவருடன் பிறந்த சகோதரனோ, பள்ளியில் முதல் மார்க் வாங்கும் மாணவன். அவனைக் காட்டியே, "அவன் எப்படிப் படிக்கிறான்? நீயும் இருக்கியே" என்று மற்ற மாணவர்களும் ஆசிரியர்களும் ஏளனம் செய்தனர். வழக்கமாகச் சரியாகப் படிக்காத மாணவர்களைப் பள்ளியில் ஃபெயில் ஆக்குவார்கள். லெஸ் பிரவுன் விஷயத்தில் இன்னும் மோசமாக அது நடந்தது. ஆறாம் வகுப்புக்குப் போன பிறகு, 'இந்த வகுப்பில் படிக்கும் அறிவுத்திறன் உனக்கு இல்லை' என்று சொல்லி ஐந்தாம் வகுப்புக்குத் திருப்பி அனுப்பினார்கள்.

ஒருநாள் லெஸ் பிரவுன் வாழ்வில் ஒரு மாற்றம் நிகழ்ந்தது. தன் வகுப்பு முடிந்து சகோதரனை அழைத்துக்கொண்டு வீட்டுக்குப் போவதற்காக அவன் வகுப்புக்குப் போனார் லெஸ் பிரவுன். அவன் வகுப்பில் ஆசிரியர் கணிதப்பாடம் நடத்திக்கொண்டிருந்தார். கரும்பலகையில் ஒரு கணக்கைப் போட்டு, "இதற்கு விடை தேட யாராவது வாருங்கள்" என்று கூப்பிட்டார். மாணவர்கள் யாரும் வரவில்லை. வாசலில் நின்றிருந்த லெஸ் பிரவுன் பக்கம் திரும்பிய ஆசிரியர், "நீ வந்து இந்தக் கணக்கிற்கு விடை தேடு" என்றார். லெஸ் பிரவுன் தயக்கத்துடன், "என்னால் முடியாது, நான் கற்றல் திறன் குறைவாக உள்ள மாணவன்" என்று கூற, வகுப்பில் எல்லோரும் சிரித்தனர்.

ஆனால், ஆசிரியர் சிரிக்கவில்லை. லெஸ் பிரவுனை நெருங்கி அரவணைத்த அவர், "இனிமேல் இப்படிச் சொல்லாதே! உன்னைப் பற்றிய மற்றவர்களின் அபிப்ராயம் எப்போதும் உண்மையாகிவிடாது. உன்னைப் பற்றி நீ என்ன நினைக்கிறாய் என்பதுதான் முக்கியம்" என்றார்.

அந்த நாள் அவர் வாழ்வை மாற்றியது. ஆசிரியர் சொன்னதை அவர் மறக்கவே இல்லை. எல்லாத் தடைகளையும் பிரச்னைகளையும் தாண்டி அவர் உயர்ந்தார். தன் வாழ்க்கையை வைத்தே எல்லோருக்கும் உரையாற்றி, புகழ்மிக்க தன்னம்பிக்கை பேச்சாளராக உயர்ந்தார். 'உங்களுக்குள் மாபெரும் திறமை ஒளிந்திருக்கிறது. அதைக் கண்டுபிடியுங்கள்' என்பது அவரின் புகழ்மிக்க வாசகம்.

அன்பும் அக்கறையுமான நல்லாசிரியர்கள் இப்படித்தான் பல மாணவர்களின் வாழ்க்கையை மாற்றுகிறார்கள். ஒரு நல்லாசிரியரிடம் குறிப்பிட்ட சில குணங்கள் நிச்சயம் இருக்கும் என்கிறார்கள் கல்வி ஆராய்ச்சியாளர்கள். அவை:

● 'ஆசிரியர் நம்மை நம்புவதில்லை, பெற்றோரும் நம்புவதில்லை, நம்மைச் சுற்றியிருக்கும் யாரும் நம்புவதில்லை' என்ற கவலை பல மாணவர்களுக்கு இருக்கும். அதனால் அவர்களுக்குத் தன்னம்பிக்கையே இல்லாமல் போகிறது. அதனால் அவர்கள் பள்ளிக்கும் ஆர்வத்துடன் வருவதில்லை, நன்றாகவும் படிப்பதில்லை. ஆசிரியர்களே அவர்களுக்குள் நம்பிக்கையை விதைக்கிறார்கள். 'இந்த நாளைக்குள் இதைக் கற்றுக்கொள்வேன்' என்பது போல ஒவ்வொரு பாடத்தையும் சில இலக்குகளை வைத்துப் படிக்கும் வித்தையைச் சொல்லிக் கொடுக்கிறார்கள். மாணவர்களின் அந்த மாற்றம் தேர்வுகளில் வெளிப்படும்போது, பாராட்டி ஊக்கப்படுத்துகிறார்கள்.

● மாணவர்களின் இயல்பான வளர்ச்சியை அவர்களே உறுதி செய்கிறார்கள். ஒவ்வொரு வகுப்பாக முன்னேறும்போது, கற்றல் திறனும் அதிகரிக்க வேண்டும். அறிவாற்றலும் மேம்பட வேண்டும். எதிர்காலத்தில் அடைய வேண்டிய இலக்குகளை நோக்கி அந்தப் பயணம் இருக்க வேண்டும். அதற்கான சிறந்த பாதையை நல்லாசிரியர்களே உருவாக்கிக் கொடுக்கிறார்கள்.

● ஒரு நல்லாசிரியர் தன் வகுப்பறையைத் திறம்பட வழிநடத்துகிறார். கீழ்ப்படிந்து நடக்கும் மாணவர்களைத் தட்டிக் கொடுத்து, சேட்டை செய்யும் மாணவர்களைச் சமாளித்து, ஒழுங்குக்கு வராத மாணவர்களைக் கண்டித்து, எல்லோரும் கவனிக்கும்விதமாக அவர் பாடங்களை நடத்துகிறார். மாணவர்களின் கற்பனைத்திறனை வளர்க்கும்விதமாக அவரின் கற்பித்தல் முறை இருக்கும். தெளிவாகப் புரிந்துகொள்ளும் வகையில் பாடங்களை விவரித்து, சரியான உதாரணங்களையும் சுட்டிக் காட்டி, கல்வியை ஆழ்மனத்தில் பதியவைப்பார்.

● ஒரு நல்லாசிரியர் சிறந்த தயாரிப்புகளுடன் வகுப்பறைக்கு வருவார். இன்று என்ன பாடம் நடத்துகிறோம், அதைச் சராசரி மாணவனுக்கும் புரியவைக்கும்விதமாகக் கற்றுத் தருவதற்கு நான் என்ன செய்ய வேண்டும், எப்படிப்பட்ட கேள்விகளைக் கேட்டால் அவர்களுக்கு நன்றாகப் புரியும், கரும்பலகையில் என்ன எழுத வேண்டும், நோட்ஸ் என்ன கொடுக்க வேண்டும், வீட்டுப்பாடமாக எதைச் செய்யச் சொல்லலாம் என்று எல்லாமே அவர் மனக்கண்களில் விரிய வேண்டும்.

● சிறந்த ஆசிரியர் ஒருவர், தன் மாணவர்களிடம் அதிகபட்ச எதிர்பார்ப்புகளை வைப்பார். 100 மதிப்பெண் வாங்க வேண்டிய மாணவன் 95 மதிப்பெண் வாங்கினால் திருப்தி அடையமாட்டார். சராசரியான செயல்களை அவர் பாராட்டமாட்டார். 'எப்படியாவது மிகச்சிறந்த சாதனையைச் செய்து நம் ஆசிரியரிடம் பாராட்டு வாங்கிவிட வேண்டும்' என்று மாணவர்கள் ஏங்கும்விதமாக அவரின் செயல்பாடுகள் இருக்கும்.

● ஒரு நல்லாசிரியர், சக ஆசிரியர்களைப் பார்த்து தன் திறன்களை மேம்படுத்திக்கொள்வார். தனக்குத் தானே ஏராளமான கேள்விகள் கேட்டுக்கொள்வார். 'நான் இதை ஏன் செய்கிறேன்? இதன் மூலம் என்ன விளைவுகள் ஏற்படும்? என் மாணவர்களின் தேவைகளை இன்னும் சிறப்பாக நிறைவேற்றுவதற்கு என்ன செய்யலாம்? கல்வியில் அவர்களுக்கு ஈடுபாடு வருவதற்கு என்னென்ன செய்யலாம்?' என்றெல்லாம் கேள்விகள் கேட்டுத் தனது கற்பித்தல் முறையை இன்னும் சிறப்பாக மாற்றுவார்.

● ஒரு சிறந்த ஆசிரியரின் கற்பித்தல் முறை உணர்ச்சிப்பூர்வமாக இருக்கும். மாணவர்களுடன் உரையாடி, பேசிச் சிரித்து, கடினமான பாடத்தையும் எளிமையான வாழ்க்கை உதாரணங்கள் கலந்து விளக்கி, தேவையான இடங்களில் பிராக்டிகலான விஷயங்களைச் செய்துகாட்டியும் கல்வி புகட்டுவார். அவரின் வருகையை மாணவர்கள் ஆவலுடன் எதிர்நோக்குவார்கள். ●

# நீங்கள் உருவாக்குவது என்ன?

ஒரு பள்ளியில் ஒரே வகுப்பில் படித்த நண்பர்கள் 20 ஆண்டுகளுக்குப் பிறகு சந்தித்துக்கொண்டனர். அவர்களில் பலர் தொழிலதிபர்களாக இருக்க, சிலர் உயர் அதிகாரிகளாகப் பல நிறுவனங்களில் இருந்தனர். ஒரே ஒருவர் பள்ளி ஆசிரியராக அதே பள்ளியில் பணிபுரிந்துகொண்டிருந்தார். சொந்த ஊரிலேயே எந்த வளர்ச்சியும் இல்லாமல் அவர் இருப்பதாகப் பலருக்குத் தோன்றியது.



ஒருவர் அவரைக் கிண்டல் செய்தார். “நம் நண்பர்களைப் பார், நான் தொழிலதிபராக வீட்டு உபயோகப் பொருட்கள் உருவாக்குகிறேன். அவர் கம்ப்யூட்டர் உருவாக்குகிறார். இவர் தையல் மெஷின்களை உருவாக்குகிறார். இன்னொருவர் காருக்கு உதிரிபாகங்கள் உருவாக்குகிறார். உண்மையைச் சொல்லு, நீ உருப்படியா என்ன செய்கிறாய்?” என்று அவர் கேட்க, எல்லோரும் ஆசிரியரைப் பார்த்துச் சிரித்தார்கள்.

“நான் என்ன செய்கிறேன் என்று தெரிந்துகொள்ள விருப்பமா? நான் குழந்தைகளைக் கேள்வி கேட்க வைக்கிறேன். எழுதவும் படிக்கவும் வைக்கிறேன். கணிதம், அறிவியல் என்று எல்லாவற்றையும் கற்றுக்கொள்ள வைக்கிறேன். அவர்களின் திறமையை அவர்களுக்கு உணர்த்துகிறேன். கடினமாக உழைக்க வைக்கிறேன். சரியாகச் செய்தால் பெருமிதப்படவும், தவறாகச் செய்தால் மன்னிப்புக் கேட்கவும் அவர்களுக்குக் கற்றுக் கொடுத்திருக்கிறேன். இந்தப் பள்ளியிலிருந்து போய் நீங்கள் சகல துறைகளிலும் உயர்ந்தீர்கள் அல்லவா? உங்களைவிடச் சிறப்பான அடுத்த தலைமுறைச் சாதனையாளர்களாக அவர்கள் வருவார்கள். நீங்கள் எல்லோரும் எதை எதையோ உருவாக்குகிறீர்கள். ஆனால், நான் மாற்றத்தை உருவாக்குகிறேன்” என்று அந்த ஆசிரியர், சொல்லி முடிக்க, நண்பர்கள் எல்லோரும் ஓடிவந்து அவரிடம் மன்னிப்புக் கேட்டார்கள்.

# வித்தியாசங்களை உணர வேண்டும்!



கல்வியின் மையப்புள்ளியாக இருப்பவர் ஆசிரியர்தான். ஒரு வகுப்பில் 30 முதல் 40 மாணவர்கள் இருப்பார்கள். அவர்கள் ஒவ்வொருவரும் வித்தியாசமான குணங்கள் கொண்டவர்கள். ஒவ்வொருவரிடன் தனித்துவப் பண்புகளையும் உணர்ந்துகொண்டு, அவர்களிடம் தனித்தனியாகத் தொடர்புகொள்ள முடிகிற திறமை ஆசிரியருக்கு வேண்டும். ஒவ்வொரு மாணவரும் வெவ்வேறு விதமாகப் பாடங்களைப் புரிந்துகொள்வார்கள். கடைசி பெஞ்ச் மாணவர்களுக்கும் பாடத்தைப் புரிய வைப்பதுதான் ஆசிரியரின் வெற்றி.

பள்ளிக்குச் சிலர் ஆர்வமாக வருவார்கள், சிலர் ‘வேறு வழியில்லை’ எனப் பெற்றோர் வற்புறுத்தலால் வருவார்கள், சிலர் ‘நமக்குப் படிப்பு வரவில்லை’ என்று விரக்தியாக வருவார்கள், சிலர் ‘நம்மால் ஏன் நல்ல மார்க் வாங்க முடியவில்லை’ என்ற குழப்பத்துடன் வருவார்கள். இந்த எல்லோருமே ஒரே வகுப்பறையில்தான் இருப்பார்கள். இவர்கள் அனைவருக்கும் மகிழ்ச்சியான வகுப்பறை அனுபவத்தை ஓர் ஆசிரியரால் கொடுக்க முடிந்தால், எல்லோரையும் ஆர்வமான மாணவர்களாக மாற்ற முடிந்தால், அவரே அன்பாசிரியர்.

## கைதூக்கிவிட வேண்டும்!

விழுவதற்கும் வீழ்வதற்கும் இருக்கும் வித்தியாசத்தை மாணவர்களுக்கு ஆசிரியர்களே உணர்த்தமுடியும். வீழ்பவர்கள் மீள்வது கடினம். ஆனால், விழுபவர்கள் உடனே எழுந்துவிட முடியும். இதனால்தான் அன்பாசிரியர்கள் யாரும் மாணவர்களைத் தோல்வியடைந்தவர்களாகக் கருதுவதில்லை. தேர்வில் மார்க் குறைவதையோ, தேர்ச்சி பெறாததையோ அவர்கள் வெறும் 'பின்னடைவு' என்றே சொல்வார்கள். இதிலிருந்து அந்த மாணவனால் உடனடியாக மீண்டுவிட முடியும் என்று நம்புவார்கள். ஓட்டப்பந்தய வீரர் ஒருவர் மைதானத்தில் தடுமாறி விழுந்தால், யாரோ கைகொடுத்து அவரைத் தூக்கிவிட்டு மீண்டும் ஓடவைக்க முடியும். அன்பாசிரியர்கள் இந்தப் பணியையே செய்கிறார்கள். புரியாத விஷயங்களைப் புரியவைத்து, அறிவின் பாதையை அவர்களுக்கு உணர்த்தி, குழப்பங்களைத் தெளிவுபடுத்தி, அவர்களைத் தேர்ச்சி பெற வைக்கிறார்கள்.



## தேடிக் கண்டுபிடிக்கட்டும்!

போட்டோகிராபியில் ஓர் அடிப்படை விதி இருக்கிறது. நீங்கள் புதிதாக ஓர் இடத்துக்குச் சுற்றுலா போகிறீர்கள். அங்கே போய் இறங்கியதுமே கேமராவைக் கையில் தூக்கிப் புகைப்படங்கள் எடுக்க ஆரம்பித்தால், அந்த இடத்தை நீங்கள் ரசிக்க மாட்டீர்கள். அங்கிருக்கும் அழகுகள், அபூர்வங்கள், ஆச்சர்யங்கள் எதுவுமே உங்கள் கண்ணில் தெரியாது. நீங்கள் கேமராவின் லென்ஸ் வழியே குறுகிய காட்சிகளை மட்டுமே பார்த்துவிட்டுத் திரும்பி வருவீர்கள். உங்கள் கண்களால் எந்த அற்புதங்களையும் தரிசிக்க மாட்டீர்கள். போட்டோகிராபி விதி என்னவென்றால், முதலில் எல்லா இடங்களையும் சுற்றிப் பார்க்க வேண்டும். எது உங்களுக்குச் சிறப்பாகவும் அழகாகவும் தோன்றுகிறதோ, அதை மட்டுமே புகைப்படம் எடுக்க வேண்டும்.

கல்வியும் இப்படித்தான்! பெற்றோரோ, ஆசிரியரோ 'இதுதான் உனக்கு ஏற்றது' என்று ஒரு மாணவனிடம் வலுக்கட்டாயமாகத் திணிக்கக்கூடாது. அது அவர்களுடைய வாழ்வின் எதிர்காலம். எல்லாவற்றையும் அவர்கள் பார்க்கட்டும். எதில் அவர்களுக்கு ஆர்வம் வருகிறது என்று அறியட்டும். அவர்களின் திறமையை ஆசிரியர்கள் கண்டறியட்டும். அதை வைத்து நல்லாசிரியர்கள் அவர்களுக்கு எதிர்காலத்தை உணர்த்துவார்கள்.

## வழிகாட்டும் ஒளி!


மாணவர்கள் வீட்டைவிட அதிக நேரம் செலவழிப்பது பள்ளியில்தான். அதனால், ஒவ்வொரு மாணவனின் திறன் என்ன என்பதைப் பெற்றோரைவிட ஆசிரியர்களே அதிகம் அறிவார்கள். அன்பாசிரியர் ஒருவர், தன் மாணவர்களின் திறமையைக் குறைத்து மதிப்பிடமாட்டார். 'ஒவ்வொரு குழந்தைக்கும் ஒரு தனித்திறன் உண்டு, அந்தக் குழந்தை ஏதோ ஒரு சாதனை புரியவே பிறந்திருக்கிறது' என்று அவர் நம்புவார்.



வாழ்க்கையில் ஒவ்வொருவரும் பெறும் வெற்றிகளுக்கு அவர்களின் ஆசிரியர்கள் ஏதோ ஒருவகையில் காரணமாக இருப்பார்கள். கடினமான தருணங்களிலிருந்து மீண்டுவரும் உத்வேகத்தையும் ஆசிரியர்களே கொடுப்பார்கள். திசை தெரியாத இருளில் வழிகாட்டும் ஒளியாக அவர்களே இருப்பார்கள். எதிரில் இருக்கும் எத்தனையோ பாதைகளில் எது சிறந்தது என்று புரியாமல் ஒரு மாணவன் குழம்பி நிற்கும்போது, ஆசிரியர்களே சரியான பாதையைக் காட்டுவார்கள். ஒரு மாணவனின் வெற்றியைத் தனது வெற்றியாக நினைத்து மகிழ்ச்சி அடைவார்கள்.

# ஆசிரியரைப் போற்றும் மொழிகள்!

- குழந்தைகளின் மனதுக்குக் கல்வி புகட்டும் அதே நேரத்தில், அவர்களின் இதயங்களைப் பண்படுத்துவதும் ஆசிரியர்களின் கடமை.
- ஒரு நல்லாசிரியர் குழந்தைகளிடம் நம்பிக்கையை விதைக்கிறார், கற்பனையைத் தூண்டுகிறார், அறிவை நேசித்துப் பெறச் செய்கிறார்.
- அறிவும் நற்பண்பும் கொடுப்பதே உண்மையான கல்வியின் நோக்கம்.
- மாணவர்களை மதித்து மரியாதை கொடுக்கும் வகுப்பறையில்தான் நல்ல கற்றல் நிகழ்கிறது.
- ஒவ்வொரு குழந்தையும் கற்பனையில் ஒரு மனக்கோட்டை கட்டி, அதை நிஜமாக்கும் வல்லமை பெற்றது என்று உணர்ந்தவரே சிறந்த ஆசிரியர்.
- கல்வி என்பது வெற்றுப் பாத்திரத்தைத் தண்ணீர் ஊற்றி நிரப்புவது போன்றதல்ல, ஒரு விளக்கை நெருப்பால் பிரகாசிக்கச் செய்வது.
- புத்திசாலி ஆசிரியர்கள் பாராட்டப்படுவார்கள். ஆனால், மனிதநேயமுள்ள ஆசிரியர்களையே மாணவர்கள் எப்போதும் நன்றியுடன் நினைக்கிறார்கள்.
- ஆசிரியர் தொழிலே மற்ற எல்லாத் தொழில்களைச் செய்பவர்களையும் செதுக்கி உருவாக்குகிற புனிதமான சேவை.
- ஒரு விஷயத்தைத் தெரிந்துகொண்டவர்கள், அதைச் செய்ய ஆரம்பிப்பார்கள். புரிந்துகொண்டவர்களே, ஆசிரியர்களாக மாறிக் கற்பிக்கிறார்கள்.
- சராசரி ஆசிரியர் சொல்லித் தருவார், நல்ல ஆசிரியர் அதை விவரிப்பார், சிறந்த ஆசிரியர் அதைச் செய்துகாட்டி விளக்குவார். உன்னதமான ஆசிரியர் அதை மாணவனின் ஆழ்மனத்தில் விதைப்பார்.
- வாழ்க்கை என்னும் கரும்பலகையில் ஓர் ஆசிரியர் எழுதிவைக்கும் விஷயங்கள் எந்தக் காலத்திலும் அழிக்க முடியாதவை.
- கற்றுக்கொடுக்கும் ஆசிரியராக இருப்பவர், கற்றுக்கொள்வதை எப்போதும் நிறுத்தமாட்டார்.
- இளம் வயது பள்ளி நினைவுகளில் இப்போது மூழ்கும்போது, எப்படிக் கற்றுக்கொண்டோம் என்பது நினைவிருக்காது. யார் கற்றுக்கொடுத்தார் என்பது மறந்திருக்காது. ஆசிரியர்களைப் போற்றுவோம்.
- ஒரு நல்லாசிரியர் மெழுகுவர்த்தி போன்றவர். தன்னையே உருக்கிக்கொண்டு, அடுத்த தலைமுறைக்கு ஒளி தருகிறார்.
- ஒரு மாணவனின் கைகளைப் பற்றி, மனத்தைத் திறந்துவைத்து, இதயத்தைத் தொடுபவரே அன்பாசிரியர்.
- ஆயிரம் நாட்கள் ஆழ்ந்து படிப்பதைவிட, நல்லாசிரியருடன் ஒருநாள் செலவிட்டுக் கற்றுக்கொள்வது சிறந்தது.
- வீட்டுப் பாடங்களைத் தாண்டி, இன்று வீட்டுக்குப் போனதும் சிந்திப்பதற்காக ஏதோ ஒரு விஷயத்தைக் கற்றுத் தருபவரே அன்பாசிரியர்.
- சிறந்த ஆசிரியர்கள் தங்கள் இதயத்தின் அடி ஆழத்திலிருந்து சொல்லித் தருகிறார்கள், வெறுமனே புத்தகங்களிலிருந்து மட்டும் அல்ல!
- சரியான பதில்களைத் தருபவரைவிட, சரியான கேள்விகளைக் கேட்டுக் கற்றுக்கொள்ள வழிபாட்டுபவரே நல்லாசிரியர்.
- மற்ற எல்லாத் தொழில்களைவிடவும் ஆசிரியர் தொழிலே எதிர்காலச் சமூகத்துக்காக முதலீடு செய்கிறது.
- எண்ணுவதற்குக் கற்றுக்கொடுப்பது நல்லது. ஆனால், குழந்தைகள் எதை எண்ண வேண்டும் என்று கற்றுக்கொடுப்பது அதைவிடச் சிறந்தது.
- ஓர் ஆசிரியரின் பாடம் காலத்தால் அழியாதது. அது எப்போது, எங்கே பயன் தரும் என்பதைக் கணக்கிட முடியாது.
- ஒரு குழந்தையின் ஆன்மாவை ஆயுள் முழுக்க வளமாக இருக்கும்படிப் பண்படுத்துவதே அன்பாசிரியரின் பொறுப்பு.
- ஒரு மாணவனுக்குள் ஒளிந்திருக்கும் திறமையை முழுமையாக வெளிக்கொண்டு வரும் திறன் பெற்றவர், அன்பாசிரியர்.
- இன்றைய குழந்தைகளுக்கு நேற்றைய பழங்கதைகளை மட்டுமே சொல்லிக் கொடுத்தால், அவர்களின் நாளைய எதிர்காலத்தை நாம் பறித்துவிடுவோம்.




RAMRAJ
LittleStars®
KIDS DHOTIS & KURTA
LET THE LITTLE ONES SHINE IN THE TRENDING TRADITION.




# அன்பாசிரியர்களுக்கு இந்து தமிழ் திசை நாளிதழுடன் இணைந்து விருது வழங்குவதில் பெருமை கொள்கிறது ராம்ராஜ் காட்டன்!

RAMRAJ ©

## முன்மாதிரி அன்பாசிரியர் 2022

| | |
|---|---|
| 1. | **திரு. நாதன்**, அரசு தொடக்கப் பள்ளி, சின்னகரையம்புதூர், புதுச்சேரி. |
| 2. | **திரு. இராசேந்திரன்**, நடுவண் சிறைப்பள்ளி, புழல், சென்னை–66. |
| 3. | **திரு. தமிழ்மணி**, ஊராட்சி ஒன்றியத் தொடக்கப் பள்ளி, தமாணிக்கோம்பை, பாப்பிரெட்டிப்பட்டி தாலுகா, தர்மபுரி. |

| | |
|---|---|
| 4. | **திரு. முருகன்**, அரசு மேல்நிலைப் பள்ளி, சுந்தரபாண்டியபுரம், தென்காசி. |
| 5. | **திருமிகு. மகேஸ்வரி**, எஸ்எம்ஏ மெட்ரிகுலேஷன் மேல்நிலைப் பள்ளி, அடைக்கலப்பட்டணம், ஆலங்குளம் தாலுகா, தென்காசி. |
| 6. | **திரு. இப்ராஹிம்**, ராமனூத்து ஊராட்சி ஒன்றியத் தொடக்கப் பள்ளி, எட்டயபுரம் தாலுகா, தூத்துக்குடி. |

## அன்பாசிரியர் 2022

CHENNAI ZONE

MADURAI ZONE

| | |
|---|---|
| 7. | **திரு. மதிவாணன்,** பி.ஆர்.ஜி. மேல்நிலைப் பள்ளி, காட்டுமன்னார்கோவில், கடலூர். |
| 8. | **திரு. சந்திரசேகரன்,** அரசு மேல்நிலைப் பள்ளி, அவளூர், காஞ்சிபுரம். |
| 9. | **திருமிகு. வசந்தகுமாரி,** தாம்பரம் பெருநகராட்சி நடுநிலைப் பள்ளி, இரும்புலியூர், சென்னை–45. |
| 10. | **திருமிகு. சுபாஷினி,** சென்னை உயர்நிலைப் பள்ளி, அரிநாராயணபுரம், கொருக்குப்பேட்டை, சென்னை–21. |
| 11. | **திரு. அனந்தராஜன்,** ஊராட்சி ஒன்றியத் தொடக்கப் பள்ளி, தேசூர், வந்தவாசி தாலுகா, திருவண்ணாமலை. |
| 12. | **திரு. கமலக்கண்ணன்,** அரசு மேல்நிலைப் பள்ளி, மேலபுலம், நெமிலி வட்டம், இராணிப்பேட்டை. |
| 13. | **திரு. பாஸ்கர ராசு,** கோலக்கார அரங்கசாமி நாயக்கர் அரசு நடுநிலைப் பள்ளி, லாஸ்பேட்டை, புதுச்சேரி. |
| 14. | **திரு. கிஷோர்குமார்,** அரசு மேல்நிலைப் பள்ளி, தட்டப்பாறை, குடியாத்தம், வேலூர். |
| 15. | **திரு. நாகராஜன்,** ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளி, செங்கமேடு, வானூர் தாலுகா, விழுப்புரம். |
| | **COIMBATORE ZONE** |
| 16. | **திரு. அன்பரசு,** அரசு மேல்நிலைப் பள்ளி, கள்ளிப்பட்டி, கோபி தாலுகா, ஈரோடு. |
| 17. | **திருமிகு. சித்ரா,** அரசுப் பழங்குடியினர் உண்டு உறைவிட நடுநிலைப் பள்ளி, அரவேனு, கோத்தகிரி, நீலகிரி. |
| 18. | **திரு. மூர்த்தி,** நிதி உதவி தொடக்கப் பள்ளி, இராவத்தூர் அஞ்சல், சூலூர் சரகம், கோவை. |
| 19. | **திருமிகு. சங்கரி,** ஊராட்சி ஒன்றியத் தொடக்கப் பள்ளி, காரியசந்திரம், நீரிகம் பஞ்சாயத்து, சூளகிரி தாலுகா, கிருஷ்ணகிரி. |
| 20. | **திருமிகு. பங்கஜம்,** அரசு உயர்நிலைப் பள்ளி, கத்தேரி, சாமியம்பாளையம் அஞ்சல், சங்ககிரி வட்டம், சேலம். |
| 21. | **திரு. நல்லமுத்து,** ஊராட்சி ஒன்றிய தொடக்கப் பள்ளி, மலைப்பட்டி, செவ்வந்திப்பட்டி அஞ்சல், எரும்பட்டி ஒன்றியம், நாமக்கல். |
| 22. | **திரு. குமரவேலு,** அரசு மேல்நிலைப் பள்ளி, கன்னிவாடி, தாராபுரம் தாலுகா, திருப்பூர். |
| 23. | **திரு. இன்பசேகரன்,** ஊராட்சி ஒன்றியத் தொடக்கப்பள்ளி, பொடாரன்கொட்டாய், மணியத்தஹள்ளி அஞ்சல், நல்லம்பள்ளி ஒன்றியம், தருமபுரி. |

| | |
|---|---|
| 24. | **திரு. சாஸ்தா சுந்தரம்,** அரு. நடேசன் செட்டியார் நடுநிலைப் பள்ளி, சிவகங்கை. |
| 25. | **திருமிகு. ஜெபசிந்தி,** அரசு மகளிர் மேல்நிலைப் பள்ளி, நாங்குநேரி, திருநெல்வேலி. |
| 26. | **திரு. துரைப்பாண்டியன்,** அரசு மேல்நிலைப் பள்ளி, வேம்பூர், தூத்துக்குடி. |
| 27. | **திருமிகு. வளர்மதி,** ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளி, கே.சிங்காரக்கோட்டை, திண்டுக்கல். |
| 28. | **திரு. வென்சிலாஸ்,** அரசு உயர்நிலைப் பள்ளி, கீழ்குளம் மேற்கு, கன்னியாகுமரி. |
| 29. | **திரு. முத்துதுரை,** ஊராட்சி ஒன்றிய தொடக்கப் பள்ளி, குறிஞ்சாங்குளம் பள்ளி, வி.கே.புதூர் தாலுகா, தென்காசி. |
| 30. | **திருமிகு. மணிமேகலை,** ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளி, டி.வாடிப்பட்டி, பெரியகுளம் ஒன்றியம், தேனி. |
| 31. | **திருமிகு. எஸ்தர்வேணி,** வள்ளல் பாரி நகராட்சி நடுநிலைப் பள்ளி, ராமநாதபுரம். |
| 32. | **திருமிகு. ஜெயமேரி,** ஊராட்சி ஒன்றிய தொடக்கப் பள்ளி, க.மடத்துப்பட்டி, வெம்பக்கோட்டை ஒன்றியம், விருதுநகர். |
| 33. | **திருமிகு. வெண்ணிலா தேவி சுரேஷ்,** அரசு மேல்நிலைப் பள்ளி, பாரப்பத்தி, மதுரை–22. |
| | **TRICHY ZONE** |
| 34. | **திருமிகு. எமல்டா குயின் மேரி,** ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளி, இடையத்தான்குடி, அரியலூர். |
| 35. | **திரு. கார்த்திகேயன்,** அரசு மேல்நிலைப் பள்ளி, ஈசநத்தம், கரூர். |
| 36. | **திருமிகு. வனிதா,** அரசு உயர்நிலைப் பள்ளி, மாங்குடி, திருவாரூர். |
| 37. | **திருமிகு. சுமித்ரா** சத்யமூர்த்தி, அரசு மாதிரி மேல்நிலைப் பள்ளி, பட்டுக்கோட்டை, தஞ்சாவூர். |
| 38. | **திருமிகு. பூபதி பிரியா,** அரசு மேல்நிலைப் பள்ளி, எட்டரை, கோப்பு வடக்கு, திருச்சி. |
| 39. | **திரு. அருள்ஜோதி,** ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளி, நாகலூர், நாகப்பட்டினம். |
| 40. | **திரு. ஆண்டனி,** இராமசாமி தெய்வானை அம்மாள் அரசு மேல்நிலைப் பள்ளி, வல்லத்திராகோட்டை, புதுக்கோட்டை. |
| 41. | **திருமிகு. ஜெசிந்தா,** ஊராட்சி ஒன்றியத் தொடக்கப்பள்ளி, மேலப்புலியூர், பெரம்பலூர். |


Genistaa®
LEGGINGS
By
RAMRAJ®
Shape up your
Confidence & Style
WITH GENISTA PREMIUM LEGGINGS
CHUDI FIT
www.ramrajcotton.in

உங்கள் வீட்டுக்கே வர வேண்டுமா?

# வெண்மை

## சந்தாதாரர் ஆகுங்கள்!



'உயர்ந்த எண்ணங்கள் உலகம் முழுவதும் சென்றடைய வேண்டும்' என்ற உயரிய நோக்கில் மதிப்புமிக்க படைப்புகளைத் தொடர்ந்து வெளியிட்டு வருகிறது வெண்மை. இந்த மாத இதழ் ஒவ்வொரு குடும்பத்திலும் பாதுகாக்கப்படும் பொக்கிஷமாகத் திகழ்கிறது.

**ஓர் ஆண்டு சந்தா ரூ.200**

**இரண்டு ஆண்டுகள் சந்தா ரூ.380**

காசோலை/வரைவோலை மூலம் அனுப்பலாம். **VENMAII** என்ற பெயரில் செக்/டி.டி. அனுப்பவும். பின்புறம் உங்கள் பெயர், ஊர் எழுதவும்.

அல்லது

VENMAII என்ற வங்கிக் கணக்கில் (A/C No:1809135000000299 Karur Vysya Bank, Tirupur SR Nagar Branch - IFSC: KVBL0001809) பணம் செலுத்தி, அதன் ஒப்புகை பிரதியை படிவத்துடன் அனுப்பி வைக்கலாம்.

- மணியார்டர்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.
- அனைத்து ராம்ராஜ் ஷோரூம்களிலும் சந்தா செலுத்தலாம்.

**வெண்மை**
ராம்ராஜ் வி டவர்,
10, செங்குந்தபுரம், மங்கலம் ரோடு,
திருப்பூர் - 641 604.
email: venmaii@ramrajcotton.net

சந்தா செலுத்தவும், மொத்தமாக வெண்மை இதழ்களைப் பெறவும் தொடர்புகொள்ளுங்கள்.
போன்:
0421–4304106, 98422 74137

## ஒரே நிமிடத்தில் வெண்மை சந்தாதாரர் ஆகலாம்!

உங்கள் சந்தாவை PhonePe G Pay Net transfer மூலம் செலுத்துங்கள்.

UPI பரிவர்த்தனை மூலமும் மொபைல் போன் மூலம் வெண்மை வங்கிக் கணக்கில் சந்தா தொகையை செலுத்தலாம். வெண்மை UPI id: kvbupiqr.75626@kvb

Bharat QR code வசதியுள்ள மொபைல் பேங்கிங் ஆப் வைத்துள்ளவர்கள், அதில் இங்கே உள்ள வெண்மை வங்கிக் கணக்கின் QR code –ஐ ஸ்கேன் செய்து சந்தா செலுத்தலாம்.

பணம் செலுத்தப்பட்டதற்கான வங்கித் தகவலை Forward செய்யுங்கள். கூடவே உங்கள் முழு முகவரியையும் அலைபேசி எண்ணுடன் வாட்ஸ்அப் செய்யுங்கள். அலைபேசி எண்: 98422 74137.

**வங்கிக் கணக்கு விவரம்: Venmaii**
**A/C No: 1809135000000299**
**Karur Vysya Bank,Tirupur SR Nagar Branch**
**IFSC Code: KVBL0001809.**



## மாணவ/ மாணவியர் சிறப்பு சலுகை

**(6ம் வகுப்புக்கு மேல் படிக்கும் மாணவர்களுக்கு இந்த சலுகை பொருந்தும். சந்தா செலுத்தும்போது, மாணவர் அடையாள அட்டை நகலை இணைத்து அனுப்பவும்.)**

| ஒரு வருட சந்தா: | 2 வருட சந்தா: |
|---|---|
| ரூ.~~200~~ ரூ.125 மட்டும். | ரூ.~~380~~ ரூ.250 மட்டும். |



## சீனியர் சிட்டிசன் சிறப்புச் சலுகை


**(60 வயதிற்கு மேற்பட்டவர்களுக்கு இந்த சலுகை பொருந்தும். பிறந்த தேதிக்கான ஆதாரச் சான்று நகலை இணைத்து அனுப்ப வேண்டும்.)**

| ஒரு வருட சந்தா: | 2 வருட சந்தா: |
|---|---|
| ரூ.~~200~~ ரூ.125 மட்டும். | ரூ.~~380~~ ரூ.250 மட்டும். |

ராம்ராஜ் ஷோரூம்களில் ரூ.10,000க்கு மேல் பொருட்கள் வாங்குபவர்களுக்கு
**ஒரு வருட சந்தா பரிசாக வழங்கப்படும்**

"தேர்வு முடிவுகளை எதிர்நோக்கிக் காத்திருக்கும் மாணவ, மாணவிகள் ஒரு பிரஷர் குக்கரில் இருக்கும் உணவு போல அழுத்தத்தில் சிக்கித் தவிக்கிறார்கள்" என்பது மனநல நிபுணர்களின் கவலைக்குரிய கருத்து. ஒரு மாணவனின் எதிர்காலத்தையே தீர்மானிக்கும் முக்கியத் தேர்வாக பிளஸ் 2 தேர்வு கருதப்படுகிறது. உயர்கல்விக்கான வாசலைத் திறந்துவைக்கும் இந்தத் தேர்வில் தோல்வி அடைந்தாலோ, மதிப்பெண்கள் குறைந்தாலோ, எதிர்காலமே இருண்டுவிட்டதாகப் பலரும் கவலை கொள்கிறார்கள்.

# வகுப்பறை தாண்டிய ஆசிரியர்கள்!



தேர்வுகளும் தேர்வு முடிவுகளும் முக்கியமானவைதான். ஆனால், எதிர்பார்த்தபடி அவை இல்லாமல் போனால், அத்துடன் வாழ்க்கை முடிந்துவிட்டதாக அர்த்தம் இல்லை. தேர்வு முடிவுகள்தான் நம் எதிர்காலத்தை நேர்மறையாக மாற்றுகின்றன; எதிர்மறையாகப் பாதிப்பு ஏற்படுத்தவும் செய்கின்றன. ஆனால், அதைத் தாண்டி நாம் எடுக்கும் முடிவுகள்தான் நம் எதிர்காலத்தைத் தீர்மானிப்பவையாக இருக்க வேண்டும்.

யாரோ ஒருவர் தேர்வில் தோல்வியடைவதாக எடுத்துக்கொள்வோம். அதற்குப் பல காரணங்கள் இருக்கலாம். தேர்வு எழுதிய அந்த நாளில் அவருக்கு ஏதேனும் உடல்நலக் கோளாறுகள் இருந்திருக்கலாம். திடீர் விபத்து நேர்ந்திருக்கலாம். அன்றைய நாளில் தேர்வை நன்றாக எழுதும் மனநிலை அவருக்கு இல்லாமல் போயிருக்கலாம். வருடம் முழுக்க நன்றாகவே படித்திருந்த அவருக்கு, தேர்வுக்கு முந்தைய தினங்களில் சரியாகப் படிக்க முடியாத அளவுக்கு ஏதேனும் பாதிப்புகள் நிகழ்ந்திருக்கலாம்; அல்லது ஒவ்வொரு பாடத்திலும் அவர் படிக்காமல் விட்டுவிட்ட பகுதியிலிருந்தே கேள்விகள் வந்திருக்கலாம். எனவே, இந்த முடிவு என்பது இந்தத் தேர்வை அவர் எப்படி எழுதினார் என்பதற்கான முடிவுதான். அதன்பின் அவர் என்னவாக மாறுகிறார் என்பது, அவர் எடுக்கப் போகும் முடிவைப் பொறுத்தது.

எங்கே தவறு நேர்ந்தது என்பதிலிருந்து கற்றுக்கொண்டு, அடுத்தமுறை சரியாகச் செய்வதுதான் ஒரே வழி.

உலக அளவில் கல்விக்கூடங்களில் புகழ்பெற்ற வீடியோ ஒன்று உண்டு. அதில், பொதுத் தேர்வு எழுத இருக்கும் மாணவ, மாணவிகளுக்கு வகுப்பு ஆசிரியர் அறிவுரை சொல்வார். "உங்கள் வாழ்க்கையில் மிக முக்கியமான தேர்வை எழுத இருக்கிறீர்கள். இந்தத் தேர்வுகள்தான் நீங்கள் எதிர்காலத்தில் என்ன ஆகப் போகிறீர்கள் என்பதைத் தீர்மானிக்கும். இந்தத் தேர்வில் நீங்கள் எடுக்கும் மதிப்பெண்கள்தான், எந்தக் கல்லூரியில் அல்லது பல்கலைக்கழகத்தில் சேர்ந்து நீங்கள் உயர்கல்வி படிக்க இருக்கிறீர்கள் என்பதை முடிவு செய்யும். உங்களுக்கு எதிர்காலத்தில் என்ன வேலை கிடைக்கப் போகிறது என்பதை அந்தக் கல்வியே முடிவு செய்யும். எனவே, இந்தத் தேர்வுகள் வாழ்வில் மிக

முக்கியமானவை என்ற உணர்வுடன் எழுதுங்கள். உங்கள் வாழ்க்கையைத் தீர்மானிக்கும் தேர்வு இதுதான்...” என்று வகுப்பு ஆசிரியை சொல்லிக்கொண்டிருக்கும்போதே யாரோ ஒருவர் வகுப்பறைக்குள் நுழைவார்.

“மன்னிக்கவும் மிஸ்! சிங்கப்பூரில் ஒரு பள்ளியின் முதல்வர் தன் மாணவர்களின் பெற்றோருக்கு எழுதிய கடிதத்தை நான் படிக்கிறேன். இதை ஆசிரியர்களும் பெற்றோர்களும் முக்கியமாக அறிந்துகொள்ள வேண்டும். குழந்தைகளும் உணர்ந்துகொள்ள வேண்டும். கடிதத்தைப் படிக்கிறேன் கேளுங்கள்...

‘அன்புள்ள பெற்றோர்களே, உங்கள் குழந்தைகளின் தேர்வுகளை நினைத்து நீங்கள் பதற்றத்துடன் இருப்பீர்கள். அவர்கள் நன்றாக எழுத வேண்டும் எனப் பிரார்த்தனை செய்வீர்கள்.

ஒரு விஷயத்தை ஞாபகத்தில் வைத்துக்கொள்ளுங்கள். தேர்வு எழுதும் இந்த மாணவர்களில் ஒரு மிகச்சிறந்த ஓவியன் இருக்கலாம். அவன் கணிதத்தைப் புரிந்துகொள்ள சிரமப்படலாம். எதிர்காலத்தில் தொழிலதிபராகும் திறமையுள்ள ஒரு மாணவன் இருக்கலாம். அவன் ஆங்கில இலக்கியத்தையும் சமூக அறிவியலையும் அலட்சியப்படுத்தலாம். ஓர் இசைக் கலைஞன் இருக்கலாம். அவனுக்கு வேதியியலில் நல்ல மதிப்பெண்கள் தேவைப்படாமல் போகலாம். ஒரு தலைசிறந்த விளையாட்டு வீரன் இருக்கலாம். அவனுக்கு உயிரியலைவிட உடலைக் கட்டுக்கோப்பாக வைத்துக்கொள்வது முக்கியம்.

உங்கள் குழந்தை நிறைய மதிப்பெண்கள் வாங்கினால் பெருமைப்படுங்கள். மகிழ்ச்சி அடையுங்கள். கொண்டாடுங்கள். குறைவாக வாங்கினால், அவர்களின் தன்னம்பிக்கையையும் கண்ணியத்தையும் நொறுக்கும் காரியத்தில் இறங்காதீர்கள். ஒரு தேர்வின் மதிப்பெண்களை வைத்து உங்கள் குழந்தையைத் தீர்மானிக்காதீர்கள். அவர்கள் இதைவிட மிகச்சிறந்த விஷயங்களை வாழ்வில் சாதிப்பார்கள். உங்கள் குழந்தைகளை நீங்கள் நேசிப்பது, இந்த மதிப்பெண்களால் குறைந்துவிடாது.

இப்படி நீங்கள் நடந்துகொண்டால், எதிர்காலத்தில் உங்கள் குழந்தைகள் இந்த உலகை வெல்வதைக் காணும் பேறு பெறுவீர்கள். ஒரு தேர்வோ, அதில் பெறும் குறைவான மதிப்பெண்களோ, உங்கள் குழந்தைகளின் கனவுகளைக் கலைத்துவிடாது. அவர்களின் திறமையைச் சிதைத்துவிடாது. இந்த உலகில் டாக்டர்களும் எஞ்சினியர்களும் மட்டும்தான் மகிழ்ச்சியாக இருக்கிறார்கள் என நினைத்துக்கொள்ளாதீர்கள்.’

அந்தக் கடிதம் சொல்வது இதைத்தான். தேர்வுகள் முக்கியமானவைதான். ஆனால், வாழ்க்கையில் அவை மட்டுமே எல்லாமும் அல்ல. மதிப்பெண்கள் அவசியம்தான், ஆனால் அவை மட்டுமே உங்களை முடிவு



செய்வதில்லை. ஒற்றைத் தேர்வு உங்கள் எதிர்காலத்தைத் தீர்மானிக்குமாறு செய்து விடாதீர்கள். ‘இதுதான் வெற்றி’ என மற்றவர்கள் வைத்திருக்கும் அளவுகோல்களால் உங்களை அளக்காதீர்கள்” என்று அவர் சொல்வதாக அந்த வீடியோ முடியும்.

தேர்வு முடிவுகள் ஒரு குறிப்பிட்ட காலம் வரையே நம்மால் பொருட்படுத்தப்படுகின்றன. யோசித்துப் பார்த்தால் நமக்கே இது புரியும். கல்லூரிக்குச் செல்லும்போதுதான் பிளஸ் 2 மதிப்பெண் நமக்கு முக்கியமாக இருக்கும். ஓரிரு ஆண்டுகளில் அதை மறந்தேவிடுவோம். வேலைக்குச் செல்லும்வரைதான் கல்லூரி மதிப்பெண்கள் தேவைப்படும். அதன்பின் அந்த மதிப்பெண்கள் நமக்கு உதவாது. அந்த வேலையை எப்படிச் செய்கிறோம் என்பதே நம் எதிர்காலத்தைத் தீர்மானிக்கும்.

மதிப்பெண்களைத் தாண்டி, நாம் பெறும் அறிவே வாழ்க்கை முழுக்க நமக்கு உதவும். கூகுள் நிறுவனத்தின் தலைமை செயல் அதிகாரி சுந்தர் பிச்சையை உங்களுக்குத் தெரியும். அவர் பிளஸ் 2 தேர்வில் 75 சதவிகித மதிப்பெண்கள் மட்டுமே பெற்றார். அவருடன் பள்ளியில் படித்த இன்னொரு மாணவர் 96 சதவிகித மதிப்பெண்கள் எடுத்தார். சுந்தர் பிச்சையைப் போலவே அவரும் கூகுள் நிறுவனத்தில்தான் வேலை பார்க்கிறார். அவரை யாருக்குமே தெரியாது. அவரைவிடப் பல மடங்கு அதிக சம்பளம் வாங்கும் சுந்தர் பிச்சையை இன்று உலகமே அறியும்.

மதிப்பெண்களைத் தாண்டி அறிவை வளர்த்துக்கொள்வதால் மட்டுமே இது சாத்தியமாகும். அதுதான் உங்களை உயரே உயரே அழைத்துச் செல்லும் ஏணி. அந்த அறிவைத் தரும் எதையும் பாடமாக எடுத்துக்கொள்ளுங்கள்; எவரையும் ஆசானாக ஏற்றுக்கொள்ளுங்கள். வகுப்பறை தாண்டிய ஆசிரியர்களைத் தேடுங்கள். ●

'ஆசிரியர் தரும் ஊக்கமே ஒரு குழந்தையின் வாழ்க்கையை மாற்றுகிறது. வாழ்க்கைத்துணை தரும் ஊக்கமே ஒரு திருமண உறவைக் காப்பாற்றுகிறது. ஒரு தலைவர் தரும் ஊக்கமே, எவருக்கும் தன் திறமையை அறிந்துகொள்ளும் வாய்ப்பைக் கொடுக்கிறது' என்றார் ஜான் மேக்ஸ்வெல் என்ற அறிஞர். 'கல்வியில் 90 சதவிகிதம் தரவேண்டியது ஊக்கம்தான்; 10 சதவிகிதப் பாடங்கள் போதுமானவை' என்கிறார் அனடோல் பிரான்ஸ்.

ஒரு மாணவனின் வாழ்க்கையை இப்படி ஊக்கம் தந்து மாற்றிய ஆசிரியை பற்றிய புகழ்பெற்ற கதை இது...

வார இறுதி முடிந்து, திங்கட்கிழமை காலை வகுப்புக்கு வந்தார் ஆசிரியை சுமதி. வகுப்பறைக்குள் நுழைந்ததுமே மாணவர்களைப் பார்த்து "Love you all" என்றார். இது அவரின் வழக்கம். தான் பொய் சொல்கிறோம் என்று அவருக்கே தெரியும். ஏனெனில், அந்த வகுப்பிலுள்ள ஒரு மாணவனை மட்டும் அவரால் நேசிக்க முடியவில்லை. சரியாகப் படிக்காத, சுத்தமாக உடைகள் அணியாத, எதிலுமே ஒழுங்காய் இல்லாத, எந்த நல்ல பண்புகளும் இல்லாத மகேஷ் என்கிற மாணவன்தான் அவன். மகேஷை அவர் வெறுத்தார்.

எல்லோரிடமும் அன்பு காட்டும் சுமதி, அவனிடம் மட்டும் நடந்துகொள்ளும் விதம் வித்தியாசமானது. எந்தவொரு தவறான விஷயத்திற்கும் அவனையே உதாரணம் காட்டினார். எந்த நல்ல விஷயத்திற்கும் அவனை நிராகரித்தார்.

காலாண்டுத் தேர்வு வந்தது. மாணவர்களின் ப்ராக்ரஸ் ரிப்போர்ட்கள் வகுப்பாசிரியர்களிடமிருந்து தலைமை ஆசிரியரின் கையெழுத்துக்கு அனுப்பப்பட்டன. ரிப்போர்ட்களைப் பார்த்த தலைமை ஆசிரியர், ஆசிரியை சுமதியை அழைத்தார். மகேஷின் ப்ராக்ரஸ் ரிப்போர்ட் அவர் கையில் இருந்தது.

"முன்னேற்ற அறிக்கை என்று இதைச் சொல்கிறோம். இது ஒரு பிள்ளையின் முன்னேற்றத்தை அறிவிக்க வேண்டும். இப்படி 'அவன் தேறமாட்டான்' என எதிர்மறையாக எழுதக்கூடாது'' என்றார் தலைமை ஆசிரியர். சுமதி தயக்கமாக, ''அவனைப் பற்றி எழுதுவதற்கு ஒரு நல்ல விஷயம்கூட இல்லை" என்றார்.

தலைமை ஆசிரியர் சில அட்டைகளை ஆசிரியை சுமதி கையில் கொடுத்தார். அவை கடந்த ஆண்டுகளுக்கான மகேஷின் ப்ராக்ரஸ் ரிப்போர்ட்கள். அவற்றைப் பார்த்தார் சுமதி. மூன்றாம் வகுப்பு அறிக்கையில், 'வகுப்பின் மிகத்திறமையான மாணவன் மகேஷ்' என்று குறிப்பு இருந்தது. தான் படித்ததை நம்ப முடியாமல் அதிர்ச்சியில் உறைந்துபோனார் சுமதி. நான்காம் வகுப்பின் அறிக்கை, 'மகேஷின் அம்மா புற்றுநோயால் பாதிக்கப்பட்டுள்ளார். அதனால் முன்புபோல அவரால் மகன் மீது கவனம் செலுத்த முடியவில்லை. அதன் விளைவு அவனிடம் தெரிய ஆரம்பித்திருக்கிறது' என அறிவித்தது. ஐந்தாம் வகுப்பின் அறிக்கை இவ்வாறு சொன்னது, 'மகேஷின் அம்மா இறந்துவிட்டார். அவனுக்கு நம் வழிகாட்டல் தேவைப்படுகிறது. இல்லாவிட்டால் நாம் அந்தக் குழந்தையை இழந்துவிடுவோம்.'

கண்ணீருடன் தலைமை ஆசிரியரைப் பார்த்து சுமதி சொன்னார். "இனி என்ன செய்யவேண்டுமென்று எனக்குப் புரிகிறது."

அடுத்த நாள் காலை அவர் வகுப்புக்குச் சென்று பிள்ளைகளைப் பார்த்து வழக்கம்போல் "Love you all" என்றார். இம்முறையும் அவர் பொய் சொல்கிறார் என்று அவருக்குத் தெரியும். ஏனென்றால், தற்போது மற்ற குழந்தைகளைவிட மகேஷ் மீது அவருக்கு இருக்கும் அன்பு அளவுகடந்ததாக இருந்தது. அது மட்டுமில்லை, எல்லாக் குழந்தைகளையும் அவர் அணுகும் முறையே மாறியது.

அதன்பிறகு ஒவ்வொரு நல்ல விஷயத்துக்கும் அவன் பெயர் உச்சரிக்கப்பட்டது. அவனுக்கு ஊக்கம் தரும் வார்த்தைகளையே தினமும் பேசினார். அக்கறை எடுத்து ஒவ்வொன்றையும் சொல்லிக் கொடுத்தார் அதன் விளைவுகள் அவன் படிப்பிலும், பண்புகளிலும், உடையிலும், ஒழுக்கத்திலும் தெரிந்தது.

அந்த ஆண்டின் பள்ளி இறுதிநாள் வந்தது. எல்லா மாணவர்களும் தம் ஆசிரியருக்கென பரிசுகள் கொண்டுவந்து வகுப்பறையில் வைத்திருந்தார்கள். அவற்றின் மத்தியில் ஒரு பெட்டி மட்டும், பழைய செய்தித்தாளால் சுற்றப்பட்டிருந்தது. ஆசிரியை சுமதிக்கு அதைப் பார்த்ததுமே, அது மகேஷ் கொண்டு வந்தது எனத் தோன்றியது. முதலில் அதையே பிரித்தார். அதனுள் பாதி உபயோகித்த சென்ட் பாட்டில் ஒன்றும், சில கற்கள் கழன்று விழுந்த வளையல்களும் இருந்தன. அவற்றைப் பார்த்து மற்ற எல்லா மாணவர்களும் சிரித்தார்கள்.

ஆசிரியை சுமதி அந்த வாசனைத் திரவியத்தைத் தன் மீது பூசிக்கொண்டார். வளையல்களை எடுத்துக் கையில் அணிந்துகொண்டார். மிக அரிதாகச் சிரிக்கும் மகேஷ், ஒரு புன்னகையுடன் சொன்னான். "இப்போது உங்களிடம் என் அம்மாவின் வாசம் வருகிறது. இறக்கும்முன் அவர் இறுதியாகப் பயன்படுத்திய சென்ட் இதுதான். இந்த வளையல்கள்தான் கடைசியாக அவர் உடலிலிருந்து அகற்றப்பட்டன."

ஓராண்டு கழிந்தது. அடுத்த ஆண்டு பள்ளி இறுதி நாளில் ஆசிரியை சுமதியின் மேஜையில் ஒரு கடிதம் இருந்தது. 'மேலும் சில ஆசிரியர்களை நான் பார்த்துவிட்டேன். ஆனால், நான் சந்தித்த மிகச்சிறந்த

ஆசிரியர் நீங்கள்தான் – அன்புடன் மகேஷ்' என அதில் எழுதியிருந்தது. இப்படி ஒவ்வோர் ஆண்டு இறுதியிலும் அதே வரிகளுடன் ஒரு கடிதம் கிடைத்தது.

ஆண்டுகள் கடந்தன. சுமதி வேறு பள்ளிக்கு மாறினார்; வேறு ஊருக்கு மாறினார். மகேஷுடன் இருந்த தொடர்பு அறுந்தது. அவர் ஓய்வுபெற்றிருந்தார். ஒருநாள் திடீரென அவரைச் சந்திக்க வந்தான் மகேஷ். தூரத்து நகரம் ஒன்றில் புகழ்மிக்க டாக்டராகப் பணிபுரிவதாகச் சொன்னான். "நான் வாழ்வில் நிறைய பேரைச் சந்தித்துவிட்டேன். ஆனால், உங்களைப் போல ஒருவரைப் பார்த்ததில்லை. எனக்குத் திருமணம் நடக்கப் போகிறது. நீங்கள் இல்லாமல் இது முழுமை பெறாது. வாருங்கள்" என அழைப்பிதழ் கொடுத்தான். கூடவே விமான டிக்கெட்டுகளும் இருந்தன.

# அன்னையாகும் ஆசிரியர்கள்!



அவரிடம் அந்த சென்ட் பாட்டில் தற்போது இல்லை. வளையல்கள் பாதுகாப்பாக இருந்தன. அவற்றை அணிந்துகொண்டு திருமணத்துக்குப் புறப்பட்டார். திருமண அரங்கில் மகேஷைத் தவிர வேறு யாரையும் அவருக்குத் தெரியாது.பின்வரிசையில் அமைதியாகச் சென்று உட்கார்ந்தார். மேடையில் இருந்தபடி வாசலையே பார்த்துக்கொண்டிருந்த மகேஷ் அவரைப் பார்த்துவிட்டு மேடையிலிருந்து இறங்கி ஓடிவந்தான். கைகளைப் பற்றி முன்வரிசைக்கு அழைத்துச் சென்றான். 'அம்மா' என ஸ்டிக்கர் ஒட்டி ரிசர்வ் செய்து வைக்கப்பட்டிருந்த இருக்கையில் அவரை அமர வைத்தான்.

"இவர் மட்டும் இல்லையென்றால் நான் இன்று இந்த இடத்தில் நின்றிருக்கவே முடியாது" என்று அவரைத் தன் மனைவியிடம் அறிமுகம் செய்துவைத்தபோது, மகேஷின் கண்களில் கண்ணீர். ஆசிரியை சுமதி அந்தப் பெண்ணைப் பார்த்துச் சொன்னார். "மகேஷ் இல்லையென்றால், ஒரு ஆசிரியர் தன் மாணவர்களுக்கு முதலில் ஒரு அன்னையாக இருக்க வேண்டுமென்பதை நான் அறிந்திருக்கவே முடியாது!"

ஆசிரியர்களே வளர்ப்பு அன்னைகளாக ஒவ்வொருவருக்கும் மாறுகிறார்கள். ●






## பனை நடு விழாவில் ராம்ராஜ்! பள்ளபாளையம் குளத்தில் 5 ஆயிரம் பனை மரக்கன்றுகள்

இப்போது நம் ஆவணங்கள் அனைத்தையும் கணினியில் சேகரிக்கிறோம். அதற்கு முன்பு காகிதங்களில் வைத்திருந்தோம். பல நூறு வருடங்களுக்கு முன்னர் படைக்கப்பட்ட உலகப் பொதுமறை திருக்குறள், திருவாசகம், பெரியபுராணம் எனப் பல இலக்கியங்கள் அனைத்தும் நமக்குக் கிடைத்திருக்கிறது என்றால், அதற்குக் காரணம் அவற்றை எழுதிவைத்த பனை ஓலைகள்தான். இந்தப் பனை மரத்தின் சிறப்பை உணர்ந்து வனம் இந்தியா பவுண்டேஷன் அமைப்பின் சார்பில் திருப்பூர் மாவட்டம் பள்ளபாளையம் கிராமத்தில் 5 ஆயிரம் மரக்கன்றுகள் பொதுமக்களின் துணையோடு நடப்பட்டன.

வனம் இந்தியா பவுண்டேஷன், திருப்பூர் மேற்கு ரோட்டரி, திருப்பூர் மாவட்ட கிரஷர் லாரி உரிமையாளர் சங்கம், குளம் காக்கும் அறக்கட்டளை ஆகிய அமைப்புகள் சார்பில் இந்த விழா நடந்தது. மாவட்ட ரோட்டரி கவர்னர் திரு. சுந்தரராஜன் தலைமை வகித்தார். வனம் இந்தியா பவுண்டேஷன் செயலாளர் திரு. சுந்தரராஜ் வரவேற்றார். சாமளாபுரம் பேரூராட்சித் தலைவர் திரு. பழனிசாமி, கருமத்தம்பட்டி நகராட்சித் தலைவர் திருமிகு. நித்யா மனோகரன் ஆகியோர் பேசினர்.

பேரூர் ஆதீனம் தவத்திரு சாந்தலிங்க மருதாசல அடிகளார், சிரவை ஆதீனம் தவத்திரு ராமானந்த குமரகுருபர சுவாமிகள், தென்சேரி ஆதீனம் தவத்திரு முத்து சிவ ராமசாமி அடிகளார், மாவட்ட கலெக்டர் திரு. கிறிஸ்துராஜ் ஆகியோர் பனை மரக்கன்று நடும் பணியைத் தொடங்கி வைத்தனர். ராம்ராஜ் காட்டன் நிறுவனரும் வனம் இந்தியா பவுண்டேஷன் அறங்காவலருமான திரு.கே.ஆர்.நாகராஜன் நிகழ்ச்சியில் பங்கேற்று மரக்கன்றுகள் நட்டார்.



## 300-வது கிராமிய சேவைத் திட்டம் தொடக்க விழா!

திருப்பூரை அடுத்த கணக்கம்பாளையம் கிராமத்தில் உலக சமுதாய சேவா சங்கம் சார்பில் கிராமிய சேவைத் திட்டம் தொடங்கி வைக்கப்பட்டது. இந்தத் திட்டம் தொடங்கி, இப்போது 300-வது கிராமத்தில் செயல்படுத்தப்படுகிறது. அதன் தொடக்க நிகழ்ச்சியாக 300 மரக்கன்றுகள் நடப்பட்டன. அதில் ராம்ராஜ் காட்டன் நிறுவனர் திரு.கே.ஆர். நாகராஜன் கலந்துகொண்டு மரக்கன்றுகளை நட்டார்.

உலக சமுதாய சேவா சங்கத்தின் தலைவர் திரு.எஸ்.கே.எம்.மயிலானந்தன் தலைமை





## கம்பன் கழக விழாவில் ராம்ராஜ்!

திருப்பூர் கம்பன் கழகத்தின் 15–ம் ஆண்டு விழாவையொட்டி, சிறப்புப் பட்டிமன்றம் நடைபெற்றது. திருப்பூர் கம்பன் கழகத்தின் தலைவரும், ராம்ராஜ் காட்டன் நிறுவனத்தின் தலைவருமான திரு. கே.ஆர்.நாகராஜன், நிகழ்ச்சிக்கு வந்திருந்தவர்களை வரவேற்று உரையாற்றினார்.

''கம்பன் கழகத்துக்கு மூன்றாவது முறையாக மூத்த தமிழறிஞர் இலங்கை ஜெயராஜ் வந்துள்ளார். ஞாயிற்றுக்கிழமை பல்வேறு பொழுதுபோக்குப் பணிச்சூழல்களுக்கு இடையே இந்த அரங்கம் நிறைந்துள்ளது. நல்லதை நாடி இங்கு வந்துள்ள அனைவரையும் வரவேற்கிறோம். கம்பன் 10 ஆயிரத்து 500 பாடல்கள் எழுதியுள்ளார். அதன் சிறு துளியை இந்தப் பட்டிமன்றத்தில் பார்க்கிறோம். திருப்பூரில் பொருளாதாரத்துக்கு எந்தப் பஞ்சமும் இல்லை. ஆனால், மக்களை ஒழுங்குபடுத்தவே கம்பன் கழகத்தை ஆரம்பித்தோம் என்று சொன்னோம். அதன் பிறகே இந்தக் கம்பன் கழகத்தை, மறைந்த ஜனாதிபதி ஐயா அப்துல்கலாம் தொடங்கி வைத்தார்'' என்றார் திரு. கே.ஆர்.நாகராஜன்.

பட்டிமன்ற நடுவராக இருந்த கம்ப வாரிதி இலங்கை இ.ஜெயராஜ் பட்டிமன்றத்தைத் தொடங்கி வைத்துப் பேசினார். "நமக்கு என்ன தேவை என்று நாம்தான் தீர்மானிக்க வேண்டும். எல்லையை அடைந்துவிட்டால் தேடுவதை நிறுத்த வேண்டும். தேடுவதிலேயே வாழ்க்கையைத் தொலைக்கக்கூடாது. செல்வத்தால் நமக்குக் கிடைப்பவை போகமும் புண்ணியமும் தான். நாளை நாளை என்று ஓடுவதால் இன்று வீணாகிறது. நம்முடைய ஆயிரம் ஆண்டு சொத்து கம்ப ராமாயணம். திருவள்ளுவர் நமக்கு இலக்கணமாகச் சொன்னார். கம்பர் இலக்கியமாகச் சொன்னார். வாழையடி வாழையாக இலக்கியம் பேசப்படுகிறது. இவற்றை நாம் அடுத்த தலைமுறைகளுக்குக் கொண்டுபோய் சேர்க்க வேண்டும்" என்றார் அவர்.

பட்டிமன்றத்தில் சென்னை சரவணன், திருச்சி விஜயசுந்தரி, கோபி ரவிக்குமார், ஈரோடு வளர்மதி ஜெயச்சந்திரன், ராஜபாளையம் உமாசங்கர், திருப்பூர் தெய்வநாயகி ஆகியோர் பேசினர். திருப்பூர் கம்பன் கழகத்தின் துணைச் செயலாளர் கவுசல்யா வேலுச்சாமி நன்றி தெரிவித்தார். செயலாளர் சோ.ராமகிருஷ்ணன், பொருளாளர் ஆர்.சிவராம் உட்பட ஏராளமானோர் பங்கேற்றனர்.



வகித்துப் பேசும்போது, "உலக சமுதாய சேவா சங்கம், மடமாகவோ அன்றி கல்விக்கூடமாகவோ, பல்கலைக்கழகமாகவோ மாறவேண்டும் என விரும்பினார் வேதாத்திரி மகரிஷி. அவரது விருப்பங்கள் அனைத்தையும் நிறைவேற்றி வருகிறோம். இது தன்னலமற்றவர்களால் சாத்தியம் ஆனது. யோகா மற்றும் ஆன்மிகக் கல்வி மையத்தால் பல ஆயிரம் பேர் பயன்பெற்றுள்ளனர். புண்ணியம் வேண்டும் என்றால் அறவாழ்க்கை வாழ வேண்டும். தர்மம் தழைக்க வேண்டும்" என்றார்.

இந்த விழாவில் ஜார்க்கண்ட் மாநில ஆளுநர் மேதகு சி.பி.ராதாகிருஷ்ணன் சிறப்பு அழைப்பாளராகக் கலந்துகொண்டார். இந்நிகழ்ச்சியில் திருப்பூர் வடக்கு தொகுதி எம்.எல்.ஏ., திரு.கே.என்.விஜயகுமார், திருநெல்வேலி தொகுதி எம்.எல்.ஏ.,திரு.நயினார்நாகேந்திரன்,ஆழியாறு அறிவுத்திருக்கோயில் அறங்காவலர் திரு. வி.எம்.கந்தசாமி ஆகியோர் முன்னிலை வகித்தனர். திட்ட இயக்குநர் திரு. பி.முருகானந்தம் விளக்க உரையாற்றினார். முன்னதாக, துணைத் தலைவர் திரு. வே.சுந்தரராஜ் வரவேற்றார். இந்நிகழ்ச்சியில் ஏராளமானோர் கலந்துகொண்டனர்.

# எப்படிப் பாடம் நடத்துவது?

வகுப்பறையில் முதல் வரிசையில் இருக்கும் மாணவர்களுக்காக ஆசிரியர்கள் பெரிதாகச் சிரமப்படுவதில்லை. கடைசிவரிசையில் இருப்பவர்கள்தான் அவரின் பெரும் உழைப்பை எதிர்பார்க்கிறார்கள். நடு பெஞ்சுகளில் இருப்பவர்களுக்காகவும் அவர் ஓரளவு சிரமப்பட வேண்டியுள்ளது. எல்லோரும் ஒரே மாதிரி கற்றுக்கொள்வதில்லை. ஒரே மாதிரி மதிப்பெண்களும் எடுப்பதில்லை.

ஒரு மாணவருக்கு எந்த விதத்தில் கற்றுக்கொள்வது பிடிக்கிறதோ, அந்த விதத்தில் சொல்லிக்கொடுத்தால்தான் அவரால் எளிதாகவும் விரைவாகவும் கற்றுக்கொள்ள முடியும். மூளையின் செயல்பாட்டை ஆராய்ந்து பார்த்து, இப்படித்தான் சொல்கிறார்கள் அறிவியல் அறிஞர்கள். ஆனால், கல்விசார்ந்த ஆராய்ச்சிகளும், அறிவியல் ஆராய்ச்சிகளும் இதற்கு எதிரான உண்மைகளைச் சொல்கின்றன.



ஒவ்வொரு மனிதரும் அடுத்தவர்களிடமிருந்து வித்தியாசப்படுவார்கள். 'எல்லோரும் தனித்துவமான படைப்புகள்' என அறிவியலே சொல்கிறது. மாணவர்களும் இப்படித்தான். கற்றல் பற்றிய சிந்தனையும் உணர்வும் ஒவ்வொரு மாணவருக்கும் வேறுவிதமாக இருக்கும். ஒவ்வொருவரின் பலமும் வேறாக இருக்கும். ஒரு மாணவரின் மூளையின் முக்கியப் பகுதிகள் எப்படி இருக்கின்றனவோ, அதைப் பொறுத்து அவரின் கற்றல் திறன் இருக்கும். அந்தத் திறனைப் பொறுத்தே அவரின் கல்வி அமையும்.

- படங்கள், ஓவியங்கள் மற்றும் ஒளிப்படங்களைப் பார்த்து கற்றுக்கொள்வது 'காட்சிவழிக் கற்றல்' எனப்படுகிறது. படங்களையே பாடங்களாக நினைக்கும் பலருக்கு இது எளிதில் புரியும்.
- உணர்வுவழிக் கற்றல் இன்னொரு வகை. சைகைகள், தொடுதல், கைகளால் செய்யப்படும் அசைவுகள் என உடலால் கற்றுக்கொள்வது இந்த வகை.
- சிலருக்கு ஒலிவழிக் கற்றல் பிடிக்கும். ஒலிப்பதிவு செய்யப்பட்ட பாடங்களைக் கேட்டு இவர்கள் கற்றுக்கொள்வார்கள்.
- சிலருக்கு வார்த்தைகள் வழியே கற்றுக்கொள்வது சுலபமாக இருக்கும். எழுதியும், கேட்டும் இவர்கள் படித்துக்கொள்வார்கள்.
- சிலருக்கு வெறுமனே மனப்பாடம் பிடிக்காது. ஒரு பாடத்தைக் கற்றுத் தருகிறோம் என்றால், அது ஏன் அப்படி வருகிறது என்ற காரணத்தைச் சொல்லிவிட்டால் புரிந்துகொள்வார்கள்.
- சிலருக்கு குரூப் ஸ்டடி பிடிக்கும். ஒரே வகுப்பில் படிக்கும் மாணவர்கள் இணைந்து, பாடம் பற்றி விவாதித்தபடி படிப்பார்கள். இந்த விவாதம் அவர்களின் கற்றலுக்கு உதவும்.
- சிலருக்குத் தனிமைக் கற்றல்தான் பிடிக்கும். அமைதியாகத் தனிமையில் அமர்ந்து தனக்குள் சத்தமின்றிப் படிப்பார்கள். இதுதான் மனதுக்குள் போகும் என்பது இவர்களின் நம்பிக்கை.

“ஒருவருக்குப் பிடித்தமாகவும் பொருத்தமாகவும் இருக்கும் கற்றல் முறை எது என்பதைப் புரிந்துகொண்டு, அதற்கு ஏற்றபடிச் சொல்லிக்கொடுத்தால், அங்கு கற்றல் சிறப்பாக இருக்கும்'' என்பது கல்வி அறிஞர்களின் கருத்து. ஆனால், இதை எதிர்ப்பவர்களும் இருக்கிறார்கள். “இது அறிவியல்ரீதியாக நிரூபிக்கப்பட்ட உண்மை அல்ல. இந்தக் கருத்தைக் கல்வியாளர்கள் தவறாகப் புரிந்துகொண்டுள்ளனர். ஒருவருக்கு எப்படி சொல்லிக்கொடுத்தால் அவரின் மூளை உற்சாகமாகிக் கற்றலைத் தூண்டுகிறது என்பதைத் தெரிந்துகொள்ளவே இந்தக் கற்றல் முறை உதவும். ஆனால், இதுவே ஒருவரைச் சிறந்த மாணவராக்கிவிடாது” என்கிறார்கள் அறிவியலாளர்கள்.

## உண்மை என்ன?

- ஒவ்வொருவரும் வித்தியாசமானவர்கள். அதனால்தான் அவர்களின் கற்றல் திறனும் வித்தியாசப்படுகிறது. சிலருக்குச் சிறப்புத் திறமைகள் இருக்கும்; சிலருக்குச் சிறப்புத் தேவைகள் இருக்கும். கற்றல் அறிவு என்பது பல்வேறு வடிவங்களைக் கொண்டது. யாரும் திறமை குறைந்தவர்கள் இல்லை. ஆசிரியர்களால் அவர்களின் திறமையைப் புரிந்துகொள்ள முடியவில்லை என்பதே உண்மை.
- மாணவர்களின் ஆர்வங்களும் வேறுவேறானவை. சிலருக்குச் சில பாடங்கள் கசக்கும்; சில பாடங்கள் இனிக்கும். எந்தப் பாடம் பிடிக்கிறதோ, அதை வேகமாகவும் ஆழமாகவும் கற்றுக்கொள்கிறார்கள்.
- மாணவர்களின் கற்றுக்கொள்ளும் திறனில், அவர்களின் பின்னணியும் ஆதிக்கம் செலுத்துகிறது. மூன்று தலைமுறைகளாகக் கல்வி கற்கும் குடும்பத்திலிருந்து வந்த மாணவனும், முதல் தலைமுறையாகப் படிக்க வரும் மாணவனும் ஒரே மாதிரி கற்றுக்கொள்ள முடிவதில்லை. வீட்டில் படிக்கும் வாய்ப்புகள் இல்லாத ஏழை மாணவனும், சகல வசதிகளையும் குடும்பத்தால் செய்துகொடுக்க முடிந்த பணக்கார மாணவனும் ஒரேமாதிரி படிப்பதில்லை.
- பெரும்பாலானவர்களுக்குக் கற்றலில் ஏதோ ஒரு குறைபாடு இருக்கிறது. இதை நோய் எனப் புரிந்துகொள்ள வேண்டியதில்லை. சிக்கலான கணக்குகளுக்குக்கூட எளிதாகத் தீர்வு கண்டுவிடுகிற ஒரு மாணவர், இரண்டு வரி திருக்குறளை மனப்பாடம் செய்ய முடியாமல் திணறுவார். இதைப் புரிந்துகொண்டு அவருக்குக் கல்வி தர வேண்டும்.

## இதில் ஆசிரியர்கள் செய்யவேண்டியது என்ன?

- வகுப்பறையில் இருக்கும் ஒவ்வொருவருக்காகவும் தனது கற்பித்தல் முறையை ஆசிரியர் மாற்றிக்கொண்டிருக்க முடியாது. எனவே, அவருக்குத் தெரிந்த சிறந்த முறை எதுவோ, அதன்படி அவர் கற்பித்தால் போதுமானது.
- மாணவர்களின் கற்கும் முறையைப் பார்க்காமல், அவர்களின் ஆர்வத்தையும் பின்னணியையும் ஆசிரியர்கள் பார்க்க வேண்டும்.
- மாணவர்களின் கற்றல் முறையையும் திறனையும்விட, ஒரு பாடத்தின் உள்ளடக்கம்தான் வேகமாகவும் சிறப்பாகவும் கற்பதைத் தீர்மானிக்கிறது.
- வெறும் உரையாடலாக மட்டும் இல்லாமல், காட்சிவழிக் கற்றல், உணர்வுவழிக் கற்றல் எனப் பல்வேறு கற்றல் முறைகளையும் கலந்து கற்பிக்க வேண்டும்.
- எல்லாப் பாடங்களையும் ஒரே மாதிரி கற்றுத்தர முடியாது; வெவ்வேறு பாடங்களை ஒரே முறைப்படி மாணவர்களால் கற்றுக்கொள்ளவும் முடியாது. மொழிப் பாடங்களைக் கற்றுக்கொள்ளும் விதம் வேறு; அறிவியலைக் கற்றுக்கொள்ளும் விதம் வேறு. தன் வகுப்பறையில் எதை எப்படிக் கற்றுத் தருவது சிறப்பு என்பதைப் புரிந்துகொண்டு, அதற்கு ஏற்றபடி ஆசிரியர்கள் செயல்பட வேண்டும்.
- ஒரு மாணவனின் கற்றல் முறைக்கும், அவன் சிறப்பாகக் கற்றுக்கொள்வதற்கும் எந்த சம்பந்தமும் இல்லை. அது திறமை சம்பந்தப்பட்டது. ●


RAMRAJ காட்டன்

# வெண்மை

VENMAII

தமிழ் மாத இதழ்

மலர் 8 இதழ் 3

செப்டம்பர் 2023

பதிப்பாளர் - கௌரவ ஆசிரியர்

**கே.ஆர்.நாகராஜன்**

ஆசிரியர்

**த.செ.ஞானவேல்**

இதழாசிரியர்

**வள்ளி**

வடிவமைப்பு

**உதயா**

புத்தக ஆக்கமும் வடிவமைப்பும்:
தரு மீடியா (பி) லிட்.,
10/55, ராஜ் தெரு,
மேற்கு மாம்பலம்,
சென்னை - 600 033
email: contacttharu@gmail.com



இந்தப் புத்தகத்தின் எந்த ஒரு பகுதியையும் பதிப்பாளரின் எழுத்துப்பூர்வமான முன் அனுமதி பெறாமல் மறுபிரசுரம் செய்வதோ, அச்சு மற்றும் மின்னணு ஊடகங்களில் மறுபதிப்பு செய்வதோ காப்புரிமைச் சட்டப்படி தடை செய்யப்பட்டதாகும்.



Published by
K.R. NAGARAJAN,
Published from
10, Sengunthapuram
Mangalam Road,
TIRUPUR - 641 604.
Ph: 9842274137

# கற்றல் ஆர்வத்தைக் குறைக்கும் 6 விஷயங்கள்!



குழந்தைகளின் கற்றல் ஆர்வத்தைக் குறைக்கும் விஷயங்கள் எவை? ஆசிரியர்கள் இதற்கு ஒருவிதமாகப் பதில் சொல்வார்கள். மாணவர்கள் இன்னொருவிதமாகப் பதில் சொல்லக்கூடும். பள்ளி மாணவர்கள் மத்தியில் நடத்தப்பட்ட ஓர் ஆய்வை வைத்து, ஆறு விஷயங்களைக் கல்வியாளர்கள் குறிப்பிடுகிறார்கள். இந்த விஷயங்களை ஆசிரியர்கள் அவற்றின் முழு அர்த்தத்துடன் புரிந்துகொண்டால், மாணவர்களை இன்னும் செம்மையாக வழி நடத்த முடியும்.

### கடினமான தேர்வு:

தேர்வு என்பது மாணவர்களின் திறமையை அவர்களுக்கே உணர்த்தி தன்னம்பிக்கை அளிப்பதற்காக வைக்கப்படுவதுதான். ஆனால், பல மாணவர்களால் வெறுக்கப்படும் முதல் விஷயமாக அதுதான் இருக்கிறது. நன்றாகப் படிக்கும் மாணவர்கள், படிக்காத கடைசி பெஞ்ச் பிள்ளைகள் என அனைவரும் இந்த விஷயத்தில் ஒன்றுதான். வகுப்பில் பாடங்களை நடத்தும்போது நன்றாகப் புரிந்துகொள்ளும், கேள்வி கேட்டால் உடனே பதில் சொல்லும், வீட்டுப் பாடங்களை முறையாக எழுதும் மாணவர்களில் சிலர்கூடத் தேர்வில் நல்ல மதிப்பெண் எடுப்பதில்லை. தேர்வு அவர்களைப் பதற்றமாக்கி விடுகிறது. எனவே, வகுப்பில் சிறுசிறு தேர்வுகளை மிகக் கடினமாக வைக்காதீர்கள். 'நான் கொடுக்கும் வினாத்தாளைக் கண்டு எல்லோரும் பயந்து ஓட வேண்டும்' என்ற மனநிலையுடன் தேர்வுக்கான கேள்வித்தாளை உருவாக்காதீர்கள். அதே சமயம் மிக எளிமையாகவும் இருக்க வேண்டியதில்லை. தேர்வு என்பது அனைத்து தரப்பு மாணவர்களையும் ஊக்கப்படுத்துவதாகவும், அவர்கள் படித்த பாடங்களை வெளிப்படுத்தும் விதமாகவும் இருக்க வேண்டும்.

### கிடைக்காத ரிவிஷன் வாய்ப்பு:

ஓர் ஆசிரியர் வந்து பாடம் நடத்துகிறார். முடித்ததும் போய்விடுகிறார். அடுத்த நாள் வரும் அவர், மீண்டும் ஏதோ ஒரு புதிய பாடத்தை நடத்துகிறார். அல்லது பழைய பாடத்தின் தொடர்ச்சியை நடத்துகிறார். மாணவர்கள், 'முன்கதைச் சுருக்கம்' போலப் பழைய பாடம் முதலில் ரிவிஷன் செய்யப்பட வேண்டும் என விரும்புகிறார்கள். குழந்தைகள் பல விஷயங்களைப் படிக்கிறார்கள். அதில் சிலவற்றைத் திரும்பத் திரும்ப அசை போட்டுப் படிக்க விரும்புவார்கள். ஆனால் நமது கல்விமுறையில் அதற்கான நேரத்தை நாம் கொடுப்பதில்லை. உதாரணமாக, நீரைக் குளிரூட்டினால் அது பனிக்கட்டியாகிறது. இதைப் புத்தகத்தில் படிக்கும் எந்த குழந்தையும் அதை மனதுக்குள் ரசித்து உள்வாங்கவே விரும்பும். ஆனால் அதற்கு

வாய்ப்பே கொடுக்காமல் அடுத்தடுத்த பாடங்களைத் திணிக்கும்போது, கல்வியை ரசிக்கும் மனப்பான்மை குறைந்துவிடுகிறது. ஆசிரியருக்குக் கற்பனையும் ரசனையும் இருந்தால், பாடங்களை மிக இனிமையாகக் குழந்தைகளுக்குக் கற்றுத் தர முடியும்.

### நெடுநேரம் பேசுவது:

பல ஆசிரியர்கள் பாடம் நடத்தும் வகுப்பறைகளை உரையாடல் களமாக நினைப்பதில்லை. மாணவர்களை வெறும் பார்வையாளர்களாக நினைத்துப் பேசிக்கொண்டே இருக்கிறார்கள். 'நான் பேசுவதை நீங்கள் எல்லோரும் கேட்பதே வகுப்பறை. என் வாய் வேலை செய்யும், உங்களுக்குக் காதுகள் மட்டும் வேலை செய்யட்டும்' என்று நினைக்கக்கூடாது. நாள்முழுக்க வெறுமனே இப்படி ஆசிரியர் பேசுவதைக் கேட்பது ரொம்ப கஷ்டம். ஓடியாடும் இயல்பு கொண்ட வயதில் இருக்கும் மாணவர்களுக்கு இப்படி அமர்வது என்பது உளவியல்ரீதியாகச் சிக்கலான விஷயம்தான். செயல்வழிக் கற்றல் போல, ஏதாவது செயல்பாடுகள் மூலம் பாடங்களைக் கற்றுத்தர வேண்டும் என மாணவர்கள் விரும்புகிறார்கள். எல்லாப் பாடங்களையும் அப்படிக் கற்றுத் தர வாய்ப்பில்லாமல் போகலாம். அதுபோன்ற நேரங்களில் ஆசிரியர்கள் தங்களிடம் உரையாடிக் கற்றுத்தர வேண்டும் என அவர்கள் எதிர்பார்க்கிறார்கள்.

### புரியவில்லை என்றால்...

ஆசிரியர்கள் கற்றுத் தருவது புரியவில்லை என்றால் கற்கும் ஆர்வத்தை குழந்தைகள் எளிதாக இழப்பார்கள். ஒரு பாடத்தை ஆசிரியர் புரிந்துகொள்ளும் விதம் வேறாக இருக்கும். மாணவர்கள் புரிந்துகொள்ளும் விதம் வேறாக இருக்கும். தான் புரிந்துகொண்டதை வைத்து, மாணவர்களுக்குப் புரிகிற மாதிரி ஆசிரியர் எடுக்கவில்லை என்றால், அது பயனில்லாமல்



போகும். சில ஆசிரியர்கள் 'புரிகிறதா?' என்று பொதுவாகக் கேட்டுவிட்டு, மாணவர்களின் பதிலை எதிர்பார்க்காமல் அடுத்த பாடத்துக்குப் போவார்கள். 'புரியவில்லை' எனக் குழந்தைகள் சொன்னால், "மற்ற எல்லோருக்கும் புரிகிறது? உனக்கு என்ன பிரச்னை? நீ கவனத்தை எங்கே வச்சிருக்கே?" என்று கேட்கும் ஆசிரியர்களும் உண்டு. இந்த இரண்டுமே தவறு. ஒவ்வொரு பாடத்திலும் அடிப்படையைத் தெளிவாகச் சொல்லிக்கொடுக்க வேண்டும். அதைச் செய்யாமல் மேலே மேலே போனால், குழந்தைகள் திணறுவார்கள்.

### சோர்வு தரும் பாடம்:

அலுப்பு ஏற்படுத்தும் விதமாகப் பாடம் எடுப்பது, மாணவர்களின் கற்றல் ஆர்வத்தைக் குறைக்கும். பாடநூல்களில் இருக்கும் பெரும்பாலான பாடங்கள், குழந்தைகளின் வாழ்க்கையுடன் நேரடியாகத் தொடர்பு இல்லாதவை. 'இவற்றைப் படிப்பதால் இப்போது என்ன பயன், எதிர்காலத்தில் என்ன பயன்' எனக் குழந்தைகளின் நினைப்பு போகும். அவர்களுக்கு இந்தப் பாடங்களின் வாழ்க்கைப் பயனை எடுத்துச் சொல்ல வேண்டும். அவர்களுக்குப் பிடித்த விஷயங்களோடு பாடத்தைக் கலந்து சொல்லிக் கொடுக்கும்போது மட்டுமே குழந்தைகள் ஆர்வமாகக் கல்வி கற்பார்கள். இந்த விஷயத்தில் ஆசிரியர்கள் எடுத்துக்கொள்ளும் அக்கறையும், பாடம் நடத்துவதற்கு முன்பாக அவர்கள் செய்துகொள்ளும் தயாரிப்புகளும் மட்டுமே மாணவர்களுக்கு உதவும். அலுப்பு தரும் ஒரு பாடத்தைக்கூட, ஆசிரியர்கள் நினைத்தால் சுவாரசியமாக நடத்த முடியும்.

### மரியாதை தரப்படாதது:

குழந்தைகள் ஆர்வமாகச் சில சமயங்களில் சந்தேகங்கள் கேட்பார்கள். அதுபோன்ற சூழல்களில், "பெரிய கேள்வி கேட்டுட்டாரு. போ... போய் உட்கார்" என்றொரு குழந்தைகளை வகுப்பறையில் மற்றவர்கள் முன்னால் பேசினால், அவர்கள் அவமானத்தில் குறுகிப் போவார்கள். கற்றுக் கொடுப்பவர் எக்காரணம் கொண்டும் குழந்தைகளை மரியாதை இல்லாமல் நடத்தக்கூடாது. தன்மானம் என்பது சிறியவர், பெரியவர் அனைவருக்கும் ஒன்றுதான். மாணவர்களின் தன்மானத்தைக் காயப்படுத்தினால் அதுவும் கற்றல் ஆர்வத்தைக் குறைக்கும். தங்களை மதிக்கும் ஆசிரியர்களே, குழந்தைகளால் அதிகம் விரும்பப்படும் ஆசிரியர்களாக இருக்கிறார்கள்.

இந்த ஆறு விஷயங்களையும் பெற்றோர்களும் ஆசிரியர்களும் புரிந்துகொண்டு செயல்பட்டால் குழந்தைகளின் கற்றல் ஆர்வத்தை வெகுவாக அதிகரித்து அவர்களுக்கு நலம் புரியலாம். ●



# குரு சொல்லும் அனுபவப் பாடம்!

மேற்கத்திய நாடுகளின் பல பல்கலைக்கழகங்களில் பட்டமளிப்பு விழாவின்போது பிரபலங்களை உரை நிகழ்த்த அழைக்கிறார்கள். பள்ளியிலும் கல்லூரியிலும் பாடங்களைப் படித்து முடித்த பிறகு, மாணவப் பருவத்தைத் தாண்டி வாழ்க்கையில் நுழையும் இளைஞர்களுக்கு அந்த வாழ்க்கை குறித்தும், அதன் நெறிகள் குறித்தும் புரிதலை ஏற்படுத்தி தன்னம்பிக்கை ததும்பச் செய்வதே இந்த உரைகளின் நோக்கம். அப்துல் கலாம், 'இன்ஃபோசிஸ்' நாராயணமூர்த்தி, ஸ்டீவ் ஜாப்ஸ், பில் கேட்ஸ், ஜாக் மா போன்றவர்கள் நிகழ்த்திய இப்படிப்பட்ட உரைகள் புகழ்பெற்றவை.

மேற்கத்திய நாடுகளைவிட மிகப் பாரம்பரியமான கல்விமுறையைக் கொண்டது இந்தியா. உலகின் பழமையான நாளந்தா பல்கலைக்கழகம், இந்தியா எப்படி கல்வி தந்தது என்பதற்கு உதாரணம். பலநாடுகளிலிருந்தும் மாணவர்கள் வந்து தங்கிப் படிக்கும் மகத்தான கல்விக்கூடமாக இதை உருவாக்கி வைத்திருந்தார்கள் நம் முன்னோர்கள்.

நம்மைப் பிரமிப்பில் ஆழ்த்த இங்கும் ஒரு விஷயம் இருக்கிறது. 3,000 ஆண்டுகளுக்கு முந்தைய நூலாகக் கருதப்படுவது 'தைத்திரீய உபநிடதம்'. தன் குருகுலத்தில் கற்றுத் தேர்ந்த மாணவர்களுக்கு ஒரு குரு நிகழ்த்தும் பிரிவுபசார உரை இதில் உள்ளது. இது கிட்டத்தட்ட ஒரு பட்டமளிப்பு விழா உரை போன்றது. மேற்கத்திய நாடுகள் நாகரிக முதிர்ச்சி அடையும் முன்னரே நாம் எந்த அளவுக்கு அறிவில் முதிர்ச்சி பெற்றிருந்தோம் என்பதைக் காட்டும் பக்குவமான அந்த உரையில் குறிப்பிடப்படும் அறிவுரைகள் இங்கே...

- எப்போதும் உண்மையே பேசு; உனக்கென இருக்கும் கடமைகளைப் புறக்கணிக்காமல் செய்.
- படித்து முடித்துவிட்டதாக நினைக்காதே, நூல்களைத் தொடர்ந்து படி.
- ஆசிரியருடன் வாழ்ந்த காலம் இன்றுடன் முடிவுக்கு வருகிறது. இனி இல்லறத்தில் இணைந்து, திருமணம் செய்துகொண்டு குழந்தைகளைப் பெற்று இனிமையாக வாழ வேண்டும்.
- உண்மையின் நிழலிலிருந்தும் தர்மத்தின் பாதையிலிருந்தும் கொஞ்சமும் பிறழாதே!
- தொழில், வேலை என்று எதைச் செய்தாலும், அதனால் சமூகம் பயன்பெற வேண்டும் என்பதை மறந்துவிடாதே!
- கற்ற கல்வியை வைத்துச் சாதனைகள் புரிய வேண்டும். கற்றதை மறந்துவிடாதே; திரும்பத் திரும்ப நினைவு கூறு.
- கடவுளையும் முன்னோர்களையும் எப்போதும் நினைவில் வை.
- தந்தை, தாய், ஆசிரியர் ஆகிய மூவரும் கடவுள்கள். தாயை மதித்திடு; கடவுளாக வணங்கு! தந்தையை மதித்திடு; கடவுளாக வணங்கு. உனது குருவையும் கடவுளாக வணங்கு!
- வீட்டுக்கு வரும் விருந்தினரை நன்கு உபசரித்துக் கவனி. உன்னைப் பரிசோதிக்க கடவுளே வந்திருப்பதாக எண்ணிக்கொள்.
- நல்லது எது, கெட்டது எது என்று பகுத்தறிந்து பார். கெட்டதை உதறித் தள்ளிவிடு; எப்போதும் நல்லதே செய்.
- உன் ஆசிரியரிடம் நீ கண்டதில் எவையெல்லாம் நல்லவையோ அவற்றை மட்டும் பின்பற்று; அவரிடம் நீ காணும் குறைகளையும் பலவீனங்களையும் மறந்துவிடு.
- இதுநாள் வரை நீ பார்த்த உன் குருவே உனக்கு மிகப்பெரிய மனிதராகத் தெரிந்திருக்கலாம். இனி சமூகத்தில் அவரைவிடப் பெரிய மனிதர்களைச் சந்திக்கப் போகிறாய். அவர்களுக்கு உரிய மரியாதை செய்.










# ராம்ராஜ் வேட்டியில் ஹாக்கி கேப்டன்கள்!

சென்னையில் சமீபத்தில் ஆசிய ஹாக்கி விளையாட்டுப் போட்டிகள் நடைபெற்றன. இந்தியா, மலேசியா, சீனா, பாகிஸ்தான், ஜப்பான், கொரியா என்று ஆறு அணிகள் பங்கேற்ற இந்தப் போட்டியில் சாம்பியன் பட்டத்தை இந்தியா வென்று சாதனை புரிந்தது.

தமிழகத்தில் ஹாக்கி சாம்பியன்ஷிப் போட்டியில் பங்கேற்க வந்த அணிகளின் கேப்டன்களுக்கு நம் தமிழ்ப் பாரம்பரிய உடையான வேட்டியை ராம்ராஜ் காட்டன் வழங்கியது. வேட்டியை முதல்முறையாக அணிந்து பார்த்து பரவசப்பட்ட அவர்கள், ராம்ராஜ் காட்டனின் தயாரிப்புகளைப் பாராட்டினர்.

ஹாக்கி கோப்பையுடன் மைதானத்தில் நடைபெற்ற நிகழ்ச்சியில் தமிழ்நாடு இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டு அமைச்சர் மாண்புமிகு உதயநிதி ஸ்டாலின், சர்வதேச ஹாக்கி சம்மேளனத்தின் தலைவர் டத்தோ திரு. தயப் இக்ராம், ஹாக்கி இந்தியா பொதுச்செயலாளர் திரு. போலாநாத் சிங், ஹாக்கி இந்தியா பொருளாளரும், தமிழ்நாடு ஹாக்கி யூனிட் தலைவருமான திரு. சேகர் J மனோகரன், தமிழக அரசின் கூடுதல் தலைமைச் செயலாளர் திரு. அதுல்ய மிஸ்ரா, விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தின் உறுப்பினர் செயலாளர் திரு. ஜே.மேகநாத் ரெட்டி ஆகியோருடன் ஆசிய ஹாக்கி விளையாட்டு அணிகளின் தலைவர்கள் காட்சி தந்தார்கள்.

## ஆசிரியர்களுக்கு மதிப்பு தரும் நாடு!

உலகிலேயே சிறந்த கல்விமுறையைக் கொண்ட நாடாக பின்லாந்தைக் குறிப்பிடுகிறார்கள். அங்கே ஆரம்பப்பள்ளியில் சேரும் மாணவர்களுக்கு முதல் ஆறு வருடங்களுக்கு ஒரே ஆசிரியர்தான் பாடம் நடத்துவார். குழந்தைகளைப் புரிந்துகொண்டு, நெறிப்படுத்தி, கல்வியையும் வாழ்வியல் அறிவையும் தந்து வழிநடத்துவது ஆசிரியரின் கடமை. ஒவ்வொரு பள்ளியிலும் உள்ள சூழலுக்கேற்பப் பாடத்திட்டத்தையும், கற்பிக்கும் முறையையும் தீர்மானிக்கும் சுதந்திரம் ஆசிரியர்களுக்கு உண்டு. ஆரம்பக்கல்வியில் சேரும் ஒரு மாணவர், உயர்நிலைக் கல்வியை முடிக்கும்போது ஒரே ஒரு தேர்வு எழுதினால் போதும். 'அடிக்கடி தேர்வு எழுதினால் மட்டுமே பிள்ளைகள் புத்திசாலிகள் ஆவதில்லை' என்கிறார்கள் பின்லாந்து கல்வியாளர்கள்.

நம் ஊரில் மருத்துவக் கல்லூரியில் சேர இடம் கிடைப்பது சிரமம். பின்லாந்தில் ஆசிரியர் பயிற்சிக் கல்லூரியில் இடம் கிடைப்பது கஷ்டம். விண்ணப்பிக்கும் 10 பேரில் ஒருவருக்கே ஆசிரியர் பயிற்சியில் சேரும் வாய்ப்பு கிடைக்கிறது. டாக்டர்கள், கல்லூரிப் பேராசிரியர்களுக்கு இணையான சம்பளம், பள்ளி ஆசிரியர்களுக்குக் கிடைக்கிறது. சமூகத்தில் மதிப்பு வாய்ந்த தொழிலாகவும் அது உள்ளது.

## யாரையும் ஃபெயில் ஆக்காத பள்ளி!

ஸ்வீடனில் பள்ளிகள் யாரையும் ஃபெயிலாக்குவதில்லை. ஒரு மாணவர் சரியாகப் படிக்கவில்லை என்றால், உடனே அதைப் பெரும் பிரச்னையாகப் பள்ளி நினைக்கிறது. மொத்த ஆசிரியர்களும் பெற்றோருடன் பேசி, அதன் காரணத்தைக் கண்டறிந்து சரிசெய்ய நினைக்கிறார்கள். 'நீ முதல் ரேங்க்', 'நீ கடைசி ரேங்க்' என தரமுத்திரை குத்தும் வழக்கம் ஸ்வீடன் பள்ளிகளில் இல்லை. ஏ, பி, சி என்று கிரேடு முறைதான் பின்பற்றப்படுகிறது. மதிப்பெண் அடிப்படையில் மட்டும் கிரேடு பிரிப்பதில்லை. சூழ்நிலை அடிப்படையிலும் கிரேடை நிர்ணயிக்கிறார்கள்.

உதாரணமாக, ஒரு மாணவரால் ஒரு தேர்வு எழுத முடியவில்லை என்றால், அவரை ஃபெயிலாக்கி விடுவது நம் ஊர் வழக்கம். ஆனால், ஸ்வீடன் மாணவர் ஒரு தேர்வு எழுதாமல் போனால், 'எஃப் கிரேடு' கொடுக்கிறார்கள். அதன் அர்த்தம், 'சந்தர்ப்ப சூழ்நிலை காரணமாக இவரைத் தேர்வின் மூலம் சோதிக்க முடியவில்லை' என்பதுதான்.





## ஒவ்வொரு குழந்தைக்கும் ஒவ்வொரு பள்ளி!

பல வித்தியாசமான கல்வி முறைகள் கொண்ட பள்ளிகள் போலந்து நாட்டில் உண்டு. வால்டோர்ப் என்ற வகை பள்ளியில் அனைத்து மாணவர்களுக்கும் ஒரே சிலபஸ் கிடையாது. 'ஒவ்வொரு மாணவனுக்கும் எது நன்றாக வருகிறது, அவர் திறன் என்ன' என்பதையெல்லாம் ஆராய்ந்து தனித்தனி பாடத் திட்டமாக வடிவமைத்துக் கொடுக்கிறார்கள். நன்கு கல்வி கற்கும் திறன் வாய்ந்த மாணவர்களைத் தேர்ந்தெடுத்து, அவர்கள் மேலும் பலவற்றைத் தெரிந்துகொள்ளும்படித் தனி சிலபஸைக் கொண்டு சொல்லிக் கொடுக்கிறது ஒருவகை பள்ளி.

சிறப்புப் பள்ளிகள் என்று மெதுவாய் பாடம் கற்கும் மாணவர்களுக்கான பள்ளிகளும் உண்டு. ஒரு மாணவருக்கு அவரின் பெற்றோரும் பாடம் சொல்லிக் கொடுக்க வசதி செய்து தரும் பள்ளிகளும் உண்டு. 'ஒருவருக்குச் செய்ய வருவது, கற்க வருவது மற்றொருவருக்கு வராது. இப்படி வித்தியாசங்கள் இருக்கும்போது, எப்படி மொத்த மாணவர்களுக்கும் ஒரே சிலபஸை வைக்க முடியும்' என்ற கேள்வியை போலந்து பள்ளிகள் நம்மைக் கேட்கின்றன.

## ஆராய்ச்சி முக்கியம்!

ஒரு விஷயத்தைப் பாடமாக வைப்பதற்கு முன்பாக, அதுபற்றி நன்கு ஆராய்ந்து, அதை எப்படி, எந்த வயதில் கற்றுத் தர வேண்டும் என்று முடிவெடுப்பதில் சிறந்து விளங்குகிறது ஆஸ்திரேலியா. உதாரணமாக, குழந்தைகள் எப்படி கடிகாரம் பார்த்து நேரம் சொல்கிறார்கள் என்பதைக்கூட விலாவாரியாக ஆராய்ந்து வைத்திருக்கிறார்கள். முதலில் சூரியன் உதித்து மறைவதைக் குழந்தைகள் புரிந்துகொள்ளும், அடுத்து 'இன்று, நாளை' என்ற நாட்களின் வேற்றுமையைப் புரிந்துகொள்ளும். அடுத்ததாக 'குறைந்த நேரம், அதிக நேரம்' என்பதைப் புரிந்துகொள்ளும். கப்பலில் சென்றால் மெல்லவும், விமானத்தில் சென்றால் சீக்கிரமாகவும் செல்ல முடியும் என்பதைப் புரிந்துகொள்ளும். அதன் பிறகே, நேரத்தை அளக்கும் கடிகாரத்தின் சின்ன முள், பெரிய முள் பற்றி அறிய ஆர்வம் காட்டும். டிஜிட்டல் கடிகாரத்தைப் பார்த்து, முள் கடிகாரத்தின் நேரத்தைத் திருத்திச் சரியாக வைக்கும் அறிவைப் பெற்ற பிறகே, ஒரு குழந்தை கடிகாரம் பார்ப்பதில் உச்சபட்ச அறிவைப் பெறுகிறது. கடிகாரம் பார்த்து மணி சொல்வதில்கூட எவ்வளவு ஆராய்ந்திருக்கிறார்கள் என்று கவனியுங்கள். இதுதான் ஆஸ்திரேலிய பாடத்திட்டத்தின் பலம்.

'மேல்நிலை வகுப்புகளில் பாடம் நடத்தும் ஆசிரியர்களுக்கு அதிக சம்பளம், ஆரம்ப வகுப்பு ஆசிரியர்களுக்குக் குறைவான சம்பளம்' என்பது அங்கில்லை. கிட்டத்தட்ட அனைத்து ஆசிரியர்களுக்கும் ஒரே சம்பளம்தான். இதனால் மிக நல்லுணர்வாகவே அங்கே ஆசிரியர்கள் பணியாற்றுகிறார்கள்.





## புதிய பள்ளி!

கொலம்பிய நாட்டின் கல்விமுறை 'எஸ்கியூலா நியூவா' (புதிய பள்ளி) எனப்படுகிறது. பொதுவாக ஒரு வகுப்பறையில் ஆசிரியரும் மாணவர்களும் எதிரெதிரே இருப்பார்கள். ஆசிரியர் கரும்பலகையில் எழுதியபடி பாடம் நடத்துவார். மாணவர்கள் வரிசையாக எதிரே அமர்ந்து அதைக் கேட்பார்கள். 'பாடத்தை உரிய நேரத்துக்குள் முடிக்க வேண்டும். தன் ஒட்டுமொத்த வகுப்பையும் பாஸ் செய்ய வைக்க வேண்டும்' என்றே ஆசிரியர் இயங்குகிறார். மாணவர்களுக்குப் பாடத்தைப் புரிந்துகொள்வதைவிட நல்ல மதிப்பெண் எடுப்பதே முக்கியமாக ஆகிவிடும்.

'எஸ்கியூலா நியூவா' முறையில் ஆசிரியரும் மாணவர்களும் வட்டமாகவோ, நீள் வட்டமாகவோ அமர்ந்திருப்பார்கள். மாணவர்கள் சிலபஸைத் தங்கள் கையில் வைத்திருப்பார்கள். அங்கே ஆசிரியர் மொத்தமாக வகுப்பு எடுக்கவே மாட்டார். உரையாடலில்தான் கல்வி நடைபெறும். உதாரணமாக, 'செடி எப்படி உணவை ஒளிச்சேர்க்கை மூலம் தயாரிக்கிறது' என்றொரு பாடம் சிலபஸில் இருந்தால், மாணவர்கள் அது பற்றி உரையாடுவார்கள். அவர்களே படித்து ஒருவருக்கொருவர் சொல்லிக் கொடுக்க முயற்சி செய்வார்கள். அதில் சிலருக்குப் புரிந்திருக்கும். சிலருக்கு அரைகுறையாகப் புரிந்திருக்கும். அப்போது ஆசிரியரிடம் கேட்பார்கள். அவர் அனைவருக்கும் தெளிவுபடுத்துவார்.

சுயமாகக் கற்பதால் மாணவர்கள் நன்கு புரிந்துகொள்கிறார்கள். மாணவர்களே ஒருவருக்கொருவர் ஆசிரியர்களாகவும் செயல்படுவதால், இன்னும் ஆழமாகக் கற்றுக்கொள்ள முடிகிறது.

# ஊக்கம் கொடுங்கள் ஆசிரியர்களே!

ஈரக் களிமண்ணாகப் பள்ளிக்குள் அடியெடுத்து வைக்கும் குழந்தைகளை, அழகிய சிற்பங்களாக மாற்றுபவர்கள் ஆசிரியர்களே! "உன்னைப் போலச் சிறந்தவர்கள் யாருமில்லை. உன்னை நினைத்து நான் பெருமைப்படுகிறேன். நீ தனித்துவமான குணங்கள் கொண்டவன். உன்னால் சாதிக்க முடியும் என்று நான் நம்புகிறேன். இந்த வகுப்பறையில் நான் மகிழ்ச்சி அடையக் காரணமே நீதான். நீ மிகப்பெரிய திறமைசாலி. உன் திறமைகளால் என்னை ஆச்சர்யப்படுத்துகிறாய். நீ கனிவாகவும் இருக்கிறாய். உன்னைச் சுற்றியுள்ள எல்லோருக்கும் மகிழ்ச்சியைப் பரப்புகிறாய். நீ செய்திருப்பது மிகச்சிறந்த காரியம். இதைத் தொடர்ந்து செய்தால் பள்ளிக்கும் உன் குடும்பத்துக்கும் பெருமை தேடித் தருவாய். நீதான் இங்கு நம்பர் 1 மாணவன்" என்றெல்லாம் ஆசிரியர்கள் பாராட்டும்போது, கடைசி பெஞ்ச்சில் இருக்கும் மாணவர்கள்கூட முதல் வரிசைக்கு வந்துவிடுவார்கள்.

ஊக்கம் தந்து வளர்த்தெடுக்கும் ஆசிரியர்கள், பல குழந்தைகளுக்குத் தாயாகவும் தந்தையாகவும் உருவெடுக்கிறார்கள். பாடப்புத்தகங்களைத் தாண்டிய வாழ்க்கை அனுபவங்களையும் குழந்தைகளுக்குக் காட்டி, இந்த உலகில் இனிமையாக வாழ்வதற்கு ஊக்கம் தருவதும் ஆசிரியர்களே! அதற்குச் சில அடிப்படை விஷயங்கள் போதுமானவை:


- தங்களைக் கட்டுப்படுத்தும் வழிகளைக் குழந்தைகளுக்குச் சொல்லிக்கொடுங்கள்.
- வாழ்வின் நோக்கம் என்ன என்பதைக் குழந்தைகளுக்கு உணர்த்துங்கள்.
- அச்சமில்லாமல் தங்களை வெளிப்படுத்த முடிகிற சூழலை அவர்களுக்கு ஏற்படுத்திக்கொடுங்கள்.
- வகுப்பறையைத் தாண்டிய உலகத்தை அவர்களுக்கு அறிமுகம் செய்யுங்கள்.
- புத்தகங்களில் இருக்கும் எழுத்துகள் மட்டுமே அனுபவங்களைக் கொடுத்துவிடாது. வாழ்க்கை அனுபவங்களையே அவர்களுக்கு பிராக்டிகல் வகுப்புகளாகச் சொல்லிக்கொடுங்கள்.
- போட்டிகள் இல்லாமல் வெற்றி, தோல்விகளை அளவிட முடியாது. ஆனால், அது பொறாமையைத் தந்துவிடாதபடி, ஆரோக்கியமான போட்டிகளை வடிவமைத்துக் கொடுங்கள். தோல்வியில் துவண்டுவிடாத வலிமையைப் பெறவும் வழிகாட்டுங்கள்.



- அவ்வப்போது பரிசுகள் தந்து ஆச்சர்யப்படுத்துங்கள். வாழ்க்கையில் முன்னேறும் ஒவ்வொரு கட்டத்திலும் பரிசுகள் கிடைக்கும் என்பதைப் புரியவையுங்கள்.
- தேவைப்படும் நேரத்தில் பாராட்டு வார்த்தைகளால் அவர்களைக் குளிரச் செய்யுங்கள். அது எல்லோரது முன்னிலையிலும் நிகழட்டும்.
- பொறுப்புணர்வையும், குழுவாக இணைந்து செயல்படும் திறனையும் அவர்கள் பெறுவதற்கு வழிகாட்டுங்கள்.
- புதிதாக அவர்கள் எதைச் செய்தாலும், அதை ஆச்சர்யத்தோடு பாருங்கள். அந்தப் பரவச உணர்வை அவர்களையும் அனுபவிக்கச் செய்யுங்கள்.
- பதற்றத்தை எப்படிக் கட்டுப்படுத்துவது எனக் கற்றுக்கொடுங்கள். ஏதோ ஒரு விஷயம் அவர்களுக்குச் சரியாக வரவில்லை என்றால், 'இதோடு உலகம் முடிந்துவிடவில்லை' என்ற புரிதலை ஏற்படுத்துங்கள்.
- தங்களைத் தாங்களே சுயபரிசோதனை செய்துகொள்ள வழிகாட்டுங்கள்.
- அவர்களுக்கு என்ன திறமை இருக்கிறது, எதில் ஆர்வம் இருக்கிறது என்பதைக் கண்டறிய உங்களைவிடச் சிறந்தவர் யாருமில்லை.
- இலக்குகளை நிர்ணயித்து, அவற்றை அடைய வழிகாட்டுங்கள். அவர்கள் வெற்றி பெறுவதற்கான வாய்ப்புகளை ஏற்படுத்திக்கொடுங்கள்.



Owned, Published by K.R. NAGARAJAN, Published from 10, Sengunthapuram Mangalam Road, TIRUPUR - 641 604 &
Printed by B. ASHOK KUMAR at RATHNA OFFSET PRINTERS, 40, Peters Road, Royapettah, Chennai - 600 014. Editor : T.J. GNANAVEL


Feel like a
champion.
Inside!
There is a champion within you.
Unleash your true potential with lasting comfort
& confidence from within, with Ramraj Banians.
Inners for Winners
RAMRAJ ©
BANIANS • BRIEFS • TRUNKS
Shreyas Iyer - Cricketer
SUKRA ®
Super Fine Banians
ROMEX ®
Supreme Banians
RISE-UP ®
Premium Banians
ARCHERY ®
Gym Vest
COMPACT ®
Flexible Rib Vest
ACOSTE ®
BANIANS | BRIEF | TRUNKS
Available @ Ramraj Showrooms & All Leading Textile Shops | Shop Online @ www.ramrajcotton.in

Venmai Monthly - Postal Registration No.TN/TRU/28/2022-24. Registered with the Registrar of Newspapers for India under No.TNTAM/2016/68519. Day of Publishing 01-09-2023. Posted at Tirupur BPC on 5th of every month.

